# கல்விக்கதிர்

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினது
உத்தியோக பூர்வ செய்தி மடல்

இதழ் - 1 மலர் - 1 2015 - 09 - 15

## சுதந்திரமாகச் சிந்திப்பதற்குக் கற்றுக்கொள்வதே கல்வி



கல்வி என்பது பாடசாலையுடனும் ஆசிரியருடனும் மாத்திரம் தொடர்புபட்ட ஒரு செயற்பாடு என்ற பழமையான மரபு ரீதியான அறிவு சார்ந்த நிலை படிப்படியாக மாற்றம் பெற்றுள்ளது. இன்று சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும் எல்லா நிறுவனங்களும் கல்வியைக் கிடைக்கச் செய்யவும் பொறுப்பேற்கவுமான புதிய சிந்தனைவாதம் கிளர்ந்துள்ளது. கல்வி எல்லோருக்குமான உரிமை என்ற வாதம் சட்டபூர்வமாக வலுப்பெற்றுள்ளது. பாடசாலையில் கற்கும்

மாணவரோ பாடசாலைக்குச் செல்லாமல் வெளியே நிற்கும் மாணவரோ உடல் ரீதியான, அல்லது உள ரீதியான குறைபாட்டை கொண்ட மாணவரோ எவராயினும் கற்றல் செயற்பாட்டில் இணைக்கப்படக்கூடியவர், இணைக்கப்பட வேண்டும். என்ற உட்படுத்தல் கல்வி நிலமை கல்விக்கான உரிமையை அர்த்தமுள்ளதாக்கியுள்ளது. மேலும் கல்வி என்பதும் கற்றல் கற்பித்தல் செயற்பாடு என்பதும் வரையறுக்கப்படக்கூடிய ஒன்றல்ல. அது பண்பு சார்ந்தது வாண்மை சார்ந்தது ஒழுக்கம் சார்ந்தது நல்விழுமியம் சார்ந்தது தேர்ச்சியும், திறனும் வாழ்வில் எதிர்கொள்ளக்கூடிய, நவீன சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய செயற்றிறனை வழங்குவதாக அமைத்தல் வேண்டும். சுதந்திரமாகவும், உரத்தும் அல்லது ஆழமாகவும் சிந்திப்பதற்கான திறனை பெற்றுக் கொடுப்பதாக கல்வி அமைதல் வேண்டும். உல்களாவிய விடயங்களை எமது உள்ளங்கைக்குள் கொண்டுவந்து வைத்துள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளாச்சியை கையாளும் நுட்பத்தையும், அதில் இருந்து எமது அரசியல், பொருளாதார வாழ்வை செழுமைப்படுத்தும் வழிவகைகளையும் கற்றுக் கொள்வதாக கல்வி அமைதல் வேண்டும்.

(தொடர்ச்சி 4 ஆம்பக்கம்)



### இதழின் உள்ளே...

* சுதந்திரமாகச் சிந்திப்பதற்கு கற்றுக் கொள்வதே கல்வி
* செயலூக்கம் உள்ள வகுப்பறை
* சிறுவர் உரிமைகளும் கல்வி இலக்குகளும்
* சமூக இசைவாக்கமும் அழகியற்கல்வியும்
* சிறுவர் நேய அணுகுமுறையும் சிறுவர் நேய பாடசாலைகளும்
* உடல் ரீதியான தண்டனை தவிர்ப்பும் உள வளத்துணையும்

மாகாணக்கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண மட்ட விளையாட்டு நிகழ்வின் போது...




அனர்த்த முகாமைத்துவ செயலமர்வு ஒன்றில்...



மாகாண மட்ட விளையாட்டு நிகழ்வின் போது




அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கூட்டத்தில்



மாகாண மட்ட விளையாட்டு நிகழ்வில்




க.பொ.த மாணவர்களுக்கான விசேட செயலமர்வு ஒன்றில்...



மாகாண மட்ட விளையாட்டு நிகழ்வின் போது சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் ஒலிம்பியன் கலாநிதி எதிர்வீரசிங்கமும், உரையாற்றும் கல்வி அமைச்சரும்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணக்கல்வித்திணைக்களம்
## வடக்கு மாகாணம்

### தொலைநோக்கு

'வட மாகாணத்தின் அனைத்து சிறார்களும் எதிர் காலச்சவால்களை எதிர்கொள்ளக்கூடிய உன்னதமான கல்வியை பெறல்

### பணிக்கூற்று

"தரமான வாழ்க்கைப்பாங்குடன் வாழ்வதற்கான அறிவுமிக்க ஆளுமையுள்ள சமுதாயம் உருவாக வழிப்படுத்தல்"

# கல்விக்கதிர்

இதழ் 1 மலர்1 2015. 9.15

மேற்பார்வையும் வழிகாட்டலும்
செ.உதயகுமார்
மாகாணக்கல்விப்பணிப்பாளர்

ஆலோசனைக்குழு

திரு.கே.பிரேமகாந்தன்
மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்
திருமதி.பி.செல்வின் இரேனியஸ்
மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்
திரு.எஸ்.பிரணவநாதன்
மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்
திரு.த.கிருபாகரன்
பிரதிக்கல்விப்பாணிப்பாளர்
திரு.ஜெனாட் பிரெட்லி
பிரதிக்கல்விப்பணிப்பாளர்
திரு.கே.சத்தியபாலன்
பிரதிக்கல்விப்பணிப்பாளர்
திரு.ஜெறாட் அன்ரனி
பிரதிக்கல்விப்பாணிப்பாளர்

இதழாசிரியர்
திரு.முத்து இராதாகிருஷ்ணன்
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்

தொடர்புகளுக்கு :- தொலைபேசி - 021 222 2805
தொலைநகல் - 021 224 1383
மின்அஞ்சல் -kalvikathirnorth@gmail.com

OFFICE OF THE MINISTER OF EDUCATION, CULTURAL AFFAIRS, SPORTS & YOUTH AFFAIRS
Northern Province, 134, Adiyapatham Road, Kokuvil, Jaffna.



### கௌரவ கல்வியமைச்சர் த.குருகுலராசா அவர்களின் ஆசிச்செய்தி

தமது கடினஉழைப்பின் பெரும் பகுதியை தம் பிள்ளை களின் கல்விக்காக செலவிட்டதன் மூலம் தமக்கென தனியானதொரு இடத்தை வகித்து வரும் வடக்கு மாகாண மக் கள் நீண்ட கல்விப் பாரம்பரியத்தை உடையவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

பாரம்பரிய திண்ணைப்பள்ளிகளில் இருந்து குரு குலக் கல்வி ஊடாக காலணித்துவ மற்றும் நவீன பாடசா லைக் கல்வி முறை வரையும் செயல்திறன்மிக்க வகை யில் செயற்பட்ட ஒரு பண்பாட்டையும் வரலாற்றையும் கொண்ட இவ் வடபுலத்தின் கல்விச் செயற்பாடுகளை முனைப்போடு செயற்படுத்தவும் கல்விக் கலந்துரை யாடல்களை மேற்கொள்ளவும் கருத்து பரிமாற்றங் களை வெளியிடக்கூடிய விதத்திலும் தகவல்களை ஆசிரியர்கள், கல்விசார் அலுவலர்கள் ஆகியோரி டையே சென்று சேர்ப்பிக்கவும் கூடிய விதத்தில் மாகாணக் கல்வித் திணைக்களம் கல்விசார் செய்தி மடல் ஒன்றை வெளியிட முன்வந்துள்ளமை பெரு மகிழ்வுக்குரிய ஒன்றாகும்.

கல்விக்கதிர் என்ற இச் செய்திமடல் இவ் வருடம் வடபுலக்கல்வியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கல்வி முறைமை மீளாய்வு பரிந்துரைகளை உரிய வகுதியினரிடையே கொண்டு சேர்ப்பதற்கான முயற்சியிலும் ஈடுபடுதல் வேண்டும் என எதிர்பார்க் கின்றேன். நவீன உலகத்திற்கு ஏற்றதும் எச்சவால் களுக்கும் முகங்கொடுக்கக் கூடியதுமான வேகமும் விவேகமும் கொண்ட கல்வி ஒழுங்கொன்றினை நோக்கி எமது மாணவர்களை வழி நடத்திச் செல்ல வேண்டிய பெரும் பொறுப்பு கல்வியாளர்களிடமும், கல்வி அதிகாரிகளிடமும் உண்டு. இக் கைங்கரியத்திற்குப் பயன்படும் வகையில் இச் செய்தி மடல் அமைய வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

த.குருகுலராசா அமைச்சர்,

"அறியாமை நீக்கி அறிவுப்பசியை வளர்த்து அதனை தீர்ப்பதற்கான சுதந்திரமான தேடலே கல்வியின் நோக்கம்"

செல்வி.அ.மேரி பவுஸ்தீனா
யா/நாவாந்துறை
றோமன்கத்தோலிக்கவித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்விப்பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு. இ . ரவீந்திரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி**



வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் 'கல்விக்கதிர்" என்ற செய்தி மடல் ஒன்றை வெளியிடுவது குறித்து மிக்க பெருமைப்படுவதோடு அதற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்சியும் அடைகின்றேன். எமது மூதாதையரினால் முதலிடம் கொடுத்து போற்றப்பட்ட தொன்றாக கல்வியே உள்ளது. எம்மைப் பெருமைப்படவும், தலைநிமிர்ந்து நிற்கவும் உதவியதும் இக் கல்வியே. இடையில் ஏற்பட்ட அனர்த்தச்சூழலுக்கு பின்பு மீண்டும் முன்நோக்கி எம்மைச் செலுத்தவும் இக்கல்வியே எமக்குரிய ஆதாரம் எனலாம். இவ்வகையில் நிறுவன ரீதியாக கல்வியை வழங்குவதற்கு செயற்றிறன் மிக்க வகையில் செயற்படும் பொறுப்பும், கடப்பாடும், தகைமையும், அதிகாரமும் கொண்ட மாகாணக்கல்வித்திணைக்களம், கல்விசார் தகவல்களை, செய்திகளை, விழிப்புணர்வுக் கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் இத்தகைய செய்திமடலை வெளியிடுவது சாலச்சிறந்தது. இது காலத்தின் தேவையுமாகும். எனவே இதனை செயற்படுத்த முன்னின்று உழைத்த மாகாணக்கல்விப்பணிப்பாளர் திரு.செ.உதயகுமார் மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் முத்து இராதகிருஷ்னன் மற்றும் ஏனைய மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள் பிரதி, உதவிக்கல்விப்பணிப்பாளர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன்.

**இ.இரவீந்திரன்**
செயலாளர்

**கல்விக்கதிரின் வருகைக்கு மாகாணக்கல்விப்பணிப்பாளின் வாழ்த்துச் செய்தி**




'கல்வியே எமது அழியாத பெருருஞ்செல்வம்" அதனைக் காத்தும் வளர்த்தும் பேணும் கல்வியாளர்கள் போற்றுதற்குரியவர்கள். வட புலத்தின் கல்வி மிக நீண்ட வரலாற்றினைக் கொண்டது. நவீன பாடசாலைக் கல்வி ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தாய்மொழிக்கூடான திண்ணைப் பள்ளிகள் பாரம்பரியமான கல்விக்கூடங்களாக கல்வியை போதித்திருந்த வரலாறு எமக்குரியது. கல்விசார் செயற்பாடுகளை ஒரு விழுமியமாகவே கைக்கொண்டு வருகின்ற பெருமையும் வடபுலத்துக்குரியது. மக்கள் தமது வருவாயில் பெரும் பகுதியினை தமது பிள்ளைகளின் கல்விக்காகவே செலவிடுகின்ற இக் கல்வி விழுமியத்தின் பேறாகவே கடந்துபோன ஊழிச்சுழலுக்கூடாகவும் அணையாது இக் கல்விச் சுடரை காத்திருக்க முடிந்துள்ளது.

வடபுலத்தின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அதனை வழிப்படுத்தும் பிரதான நிறுவனமாக மாகாணக் கல்வித்திணைக்களம் இருப்பதால் எமது செயற்பாடுகள் பற்றியும் இச் செயற்பாடுகளில் பங்கு பற்றி செயற்படுத்தும் கல்விசார் அமைப்பினை உற்சாகப்படுத்தவும், தேவையான போது உரிய தகவல்களை வழங்கவும், ஊக்கப்படுத்தவும் செய்திமடல் ஒன்றின் தேவை உணரப்பட்டது. ஆசிரியர்கள், அதிபர்கள் வலயக்கல்வி அலுவலர்கள் என்ற வகுதிக்குள் கல்விசார் விடயங்கள் பற்றிய சிந்தனையையும், விழிப்புணர்வையும் தகவல்களையும் வழங்கும் வகையில் இச் செய்திமடல் வடிவமைக்கப்பட்டு 'கல்விக்கதிர் என்ற பெயர்தாங்கி வெளிவர காலம் கைகூடி உள்ளது. இப்பணியில் முனைப்பாக நின்று செயற்படும் அனைத்து அலுவலர்களுக்கும் இவ்விடத்தில் நன்றி கூறுவதுடன் இக் கல்விக்கதிர் பயனுடையதாக வெளி வருவதற்கு எனது ஆசிகளையும் வழங்குகிறேன்.

**செ. உதயகுமார்**
மாகாணக்கல்விப்பணிப்பாளர்.

## கல்விப்பணியை செழுமைப்படுத்த உதவும் கல்விக்கதிர்



வடக்கு மாகாண கல்வித் திணைக்கம் நீண்டகாலக் கல்விப்பாரம்பரியத்தையும் கல்வியில் நாட்டத்தையும் தமது உழைப்பில் பெரும் பங்கினை கல்விக்காக செலவிடுகின்ற தன்மையினையும் விழுமியத்தையும் கொண்ட மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப உன்னதமான கல்விப்பணியை மேற்கொள்ள வழிப்படுத்தும் ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படும் கல்விச் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை ஆசிரியர்கள், அதிபர்கள், மட்டத்தில் சென்றடைவதற்கான ஒரு செய்திமடலின் தேவை பல காலமாக இருந்த போதிலும் இவ் வருடமே சாத்தியமானதொன்றாக அமையப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது. கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் கல்வியாளர்கள், பணிப்பாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை அவர்களின் செயற்பாடுகளை உற்சாகப்படுத்துவதும் தேவையான போது விடயங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தப் பயன்படுத்துவதும் இச் செய்திமடலின் இன்னொரு நோக்கமாகும் அது மாத்திரமல்லாது ஆசிரியர் மட்டத்தில் கிளர்ந்தெழும் பொருத்தமான ஆக்கங்களை செய்திகளை, பிரசுரிப்பதும் அதற்கூடாக கல்வியின் சிறப்பு பற்றிய ஒரு பார்வையினையும், கல்விசார் விழுமியம்சார் மனப்பாங்கினை வளர்ப்பதும் கூட இக் கல்விக்கதிரின் வருகைக்கு காரணமெனலாம். கல்விசார் முக்கிய விடயங்களை தாங்கி வரும் உத்தியோக பூர்வ செய்தி மடலாக இக் கல்விக்கதிர்" வெளிவருவதால் இதனைச் செழுமைப் படுத்தும் பொறுப்பு எம் அனைவருக்கும் உரியது.

**இதழாசிரியர் முத்து இராதாகிருஷ்ணன்**
மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர்.

(முதலாம் பக்கத்தொடச்சி)

பொது அறிவையும் உரத்து வாசித்தலையும் (serious Reading) ஏற்படுத்துவதுடன் உணர்வுகளை மதிக்கக்கூடிய மனிதத்துவத்துக்கு மதிப்பளிப்பதாக கல்வி அமைதல் வேண்டும். அவ்வாறாயின் கல்வி என்பது வழங்கப்படும் ஒன்றல்ல அது சுதந்திரமாகவும் சுயமாகவும் சிந்திக்கவும் செயற்படவும் கூடிய ஒரு வாழ்வியல் என்பதை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடிப்பிறப்பும் வடமாகாண கல்வி மேம்பாட்டு சிந்தனை அமர்வின் ஒரு வருடப்பூர்த்தியும்



கடந்த 2014 ஏப்ரல் மாதம் 23,24ஆம் திகதிகளில் முதன்முறையாக 'கல்வி ஆலோசனை செயலமர்வு' என்ற கல்வி மேம்பாடு சிந்தனை அமர்வு வட மாகாண கல்வியமைச்சின் முன்முயற்சியால் நடாத்தப்பட்டது. இது வரலாற்று சிறப்பு மிக்க ஒரு நிகழ்வாகும். இதில் பங்குபற்றிய மத்திய கல்வியமைச்சின் அப்போதைய கல்வியமைச்சர் மற்றும் செயலாளர்கள், பணிப்பாளர்கள் ஆகியோரின் ஏகோபித்த ஆதரவும் பங்கேற்பும் இச்செயலமர்வின் முக்கியத்துவத்தைக் காட்டி நின்றது. இக்கல்வி மாநாட்டின் பின்னர் அதில் பரிந்துரைத்துள்ள விடயங்கள் தொடர்பில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் கடந்த வருடம் ஆடிப்பிறப்பன்று நூலாக வெளியிடப்பட்டது. அதுமட்டுமல்லாது பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் ஒழுங்கினை கண்காணிக்கவும் ஆலோசனை வழங்கவும் என Rimp எனப்படும். கண்காணிப்பு குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. இவ்வாறான சிறப்பு மிக்க பல செயற்பாடுகளின் வருடப் பூர்த்தி இவ்வருடம் ஆடிப்பிறப்பன்று யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. பாரம்பரிய பெருமை மிக்க பண்பாட்டு அம்சங்கள் நிறைந்த ஒரு விழாவாக 'ஆடிக் கூழ்' காச்சுவதுடன் ஆரம்பித்த இவ்விழாவில் வட மாகாண கல்வி மேம்பாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் விலாவாரியாக பேசுபொருளாக பேசப்பட்டன. கல்வியமைச்சர் கௌரவ. குருகுலராஜா மற்றும் கல்வியமைச்சின் செயலாளர், ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள், பணிப்பாளர்கள், வலயக் கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய கல்வியாளர்கள் என பெருமளவில் இவ் ஆடிப்பிறப்பு நிகழ்வில் பங்கு பற்றியிருந்தனர்.

## க.பொ.த சாதாரண தர மாணவர் அடைவு மட்டத்தை உயர்த்தும் முயற்சியில் மாகாணக்கல்வித்திணைக்களம்



கடந்த சாதாரணதரப்பரீட்சையில் குறைந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை அடிப்படையாகக்கொண்டு குறித்த பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அதிபர்கள், ஆசிரியர்கள் என்போருக்கான விசேட செயலமர்வு மாகாணக்கல்விப்பணிப்பாளரின் நேரடி வழிகாட்டலில் மாகாணக் கல்வித்திணைக்கள மண்டபத்திலேயே நடைபெற்று வருகின்றது. வடமாகாணத்தின் வலயங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் இதில் சிறப்பான முறையில் பங்கு பற்றியுள்ளன. இச்செயலமர்வின் நோக்கம் ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதற்கு தேவையான மாற்று உபாயங்களும் கண்டறியப்பட்டு மாணவர்களுக்கான இலகுபடுத்தப்பட்ட, அதேவேளை தொடர்ச்சியான கற்பித்தல், கற்றல் நுட்பங்களை பயன்படுத்தும் திறனை வளர்ப்பதும் உரிய தேர்சியை அடைவிப்பதும் ஆகும். இச்செயற்பாடு இவ்வருடம் சாதாரணதரப்பரீட்சை எழுதும் மாணவர்களின் செயற்றிறனை நிச்சயம் அதிகரிக்கச் செய்து வடமாகாணத்தின் அடைவு மட்டத்தில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

## கல்வியபிவிருத்திக்கு வழிகாட்டும் மேலதிக வாசிப்புக்கும் கற்றலுக்குமான கைந்நூல்கள்

மாகாணக் கல்வித்திணைக்கள பாடத்துறை சார்ந்த உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் பிரதிக்கல்விப்பணிப்பாளர்களின் முயற்சியால் பாடத்துறை சார்ந்த கைந்நூல்கள் பல தயாரிக்கப்பட்டுள்ளன. வலயங்களில் பணிபுரியும் துறைசார்ந்த ஆசிரிய ஆலோசகர்கள் சிறந்த புலமைமிக்க ஆசிரியர்கள் என்போரின் அனுசரணையுடன் இந்நூல்கள் மேலதிக வாசிப்புக்கும், கற்றலுக்கும் உரிய கைந்நூல்களாக பதிப்பிக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம், வர்த்தகம், புவியியல் போன்ற பல பாடங்களுக்கு இவ்விதமான இலகு கற்றல் கைநூல்கள் வெளியிடப்பட்டு அம்மாணவர்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டுள்ளன. இது மாணவர்களின் கற்றல் பெறுபேறுகளில் நல்ல மாற்றத்தை தரும் என்ற நம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது. இதனை முன்கொண்டு செல்லும் முயற்சியில் மாகாணக்கல்விப் பணிப்பாளர் மிக ஆர்வத்துடன் வழிகாட்டிவருவதும் இதன் முக்கியத்துவத்தை காட்டுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண கல்வி அலுவலகங்களின் செயற்றிறனை மேம்படுத்தும் வலய மேற்பார்வையும் அதிபர் சந்திப்பும்

வடக்கு மாகாணத்தின் 12 வலயக்கல்வி அலுவலகங்களின் செயற்பாட்டிலேயே மாகாணத்தின் கல்வி வளர்ச்சி தங்கியுள்ளது. அவ் வகையில் புதிய மாகாண கல்விச்செயலாளர் இவ்வலயத்திணைக் களங்களின் செயற்றிறனை அதிகரிக்கும் வகையில் அவர்களது இயலுமைகளை, தேவைகளை, கண்டறியும் வகையில் வலயங்களுக்கான மேற்பார்வை திட்டமொன்றினை செயற்படுத்தி வருகின்றார். மாகாணக்கல்விச் செயலாளர், மாகாணக்கல்விப் பணிப்பாளர், மேலதிகமாகாணக் கல்விப்பணிப்பாளர்கள் உள்ளடங்கலான ஒரு குழு ஒவ்வொரு வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் விஜயம் செய்து நேரடியாக அவர்களது செயற்பாடுகள் பற்றியும் எதிர்பார்ப்புகள், தேவைகள் பற்றியும் விரிவாக விவாதித்து உரிய ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும், உரிய நிதிமூலங்களையும் வழங்கி கல்வி தொடர்பான சமூக எதிர்பார்ப்புகளை பூர்த்திசெய்யும் மனப்பாங்கையும், செயற்திறனையும் மேம்படுத்த ஊக்குவித்து வருகின்றனர். அது மட்டுமல்லாது. அவ்வவ் வலயங்களில் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள் அனைவரையும் சந்தித்து அவர்களது பாடசாலையின் கல்வித்தரம் பற்றி விரிவான கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு கல்வித்தர மேம்பாட்டிற்கான ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். கடந்த இருமாதகாலப்பகுதிக்குள் வடமாகாணத்தின் 12 வலயங்களுக்கும் இம் மேற்பார்வை நிகழ்வு செயற்படுத்தப்பட்டுள்ளமை நல் மாற்றத்திற்கான அறிகுறியாகும்.



## ஆரம்பக் கல்வி அபிவிருத்தியும், ஆரம்பக்கல்வி அபிவிருத்திக் குழுவின் உருவாக்கமும்



வடக்கு மாகாணத்தின் கல்வி முறைமை தொடர்பான மீளாய்வு மாநாடும் 'வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு அறிக்கையும்" ஆரம்பக்கல்வியின் அவசியத்தையும் அதன் செயற்றிறனை விருத்தி செய்யவேண்டிய தேவை பற்றியும் பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளமையும் யாம். அறிந்ததே ஒரு வருடகால நிறைவில் இப்பரிந்துரைகள் தொடர்பில் மாகாணக் கல்வித் திணைக்களம் மேற்கொண்ட செயற்பாடுகள் பற்றியும் அவற்றின் தாக்கங்கள் பற்றியும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

செயற்றிறன் மிக்க ஒரு மாணவ சமூதாயத்தை உருவாக்குவதாயின் அதன் உறுதிமிக்க அடித் தளமாக ஆரம்பக்கல்வியே அமையும் இன்றைய ஆரம்பக்கல்விக் கட்டமைப்பானது மாணவர்களின் செயல்மூலமான முனைப்புக்களை மேம்படுத்தி அதனூடான கற்றல் செயன்முறைகளில் உற்சாகமான பங்குபற்றலையும் உயிர்த்துடிப்பான துலங்கயையும் ஏற்படுத்தி சிறந்த ஆளுமைமிக்க சமூதாய உறுப்பினர்களாக உருவாக்க வேண்டும் என்ற சிந்தனையினைக் கொண்டது ஆயினும் நடைமுறையில் இவ்விலக்கினை அடைவதற்கு இருக்கக்கூடிய இடர்களான விடயங்கள் மீளாய்வு மாநாட்டில் அடையாளம் காணப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. அவை

1. எல்லா ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கும் கணித, விஞ்ஞான எண்ணக்கருக்கள் பற்றியும் தமிழ் மொழி ஆங்கிலம் அத்துடன் கல்வி முறைமை தொடர்பாகவும் பயிற்சி வழங்க வேண்டும்.

2. தற்போது கலைப்பிரிவில் தேர்ச்சியைப் பெற்றுள்ள தரம் 1 தொடக்கம் 5 வரை கற்பிக்கும் ஆசிரியர்களின் தேர்ச்சி மட்டத்தை அதிகரிக்க வேண்டும்.

3. தரம் 1 தொடக்கம் 5 வரை உயர் தகைமையுள்ள தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை எல்லாம் பாடங்களையும் கற்பிக்க விடுதல் வேண்டும். எல்லாப்பாடங்களுக்கும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கற்பிக்கக்கூடிய வகையில் ஆசிரியர்களை நியமிக்கவேண்டும்.

4. எல்லா வகுப்பறை கற்றலிலும் பிள்ளை நேய அணுகுமுறையை அமுல்படுத்தி கண்காணித்தல் வேண்டும்.

5 2015 வரை உலக உணவுத்திட்டத்தை தொடர்ந்து வழங்கவேண்டும். WFPஐத் திருப்தி செய்யும் வகையில் செயற்படும் தவறான நடவடிக்கைகளைத் தவிர்ப்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

மேற்படி விடயங்கள் தொடர்பில் மாகாணக்கல்வித்திணைக்கள ஆரம்பக் கல்விப்பிரிவும், மாகாணக் கல்விப்பணிப்பாளர், மகாணக்கல்விச் செயலாளர், மற்றும் கௌரவ கல்வியமைச்சர் ஆகியோரின் முன்மொழிவுடன் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் இதன் ஒரு அம்சமாக மாகாண ஆரம்பக்கல்வி அபிவிருத்தி குழு உருவாக்கப்பட்டுள்ளது இது ஆரம்பக் கல்வியின் அமுலாக்கத்தில் ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் முன்வைத்து செயற்றிறன் மிக்க வகையில் செயற்பட வழிவகுக்கும் என எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரிதப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர் உள்ளீர்ப்பும் பதவி உயர்வுச் செயற்பாடும்

வடமாகாணத்தில் தற்போது பதினைந்தாயிரத்துக்கு குறையாத ஆசிரிய வகுதியினர் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களின் சிறப்பான கற்பித்தல் பணியிலேயே எமது மாணவர்களின் எதிர்காலம் உள்ளது என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல இத்தகைய ஆசிரியர்களின் பதவியுயர்வு ஆசிரிய வகுதிகளுக்கிடையிலான உள்ளீர்ப்பு என்பவையும், ஆசிரியரின் நலநோன்பு செயற்பாடுகளும் அவர்களை சிறப்பான முறையில் தமது ஆசிரியப்பணியை முதன்மைத்தொழிலாக மேற்கொள்ள உதவியாக அமையும். இவ்வகையில் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் நிறைவடைவதற்குள் சகல ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் உள்ளீர்ப்பு செயற்பாடுகளையும், பதவியுயர்வு கடிதங்களையும் வழங்குதல் வேண்டும் என்ற நோக்கத்தில் வலயக்கல்வி அலுவலக அலுவலர்கள், மாகாணக்கல்வித்திணைக்கள அலுவலர்கள், மாகாணக்கல்வியமைச்சு அலுவலர்கள் என அனைத்து அலுவலர்களும் துரிதமாக செயற்பட்டுவருகின்றனர். இதுவரை வலயங்களில் இருந்து ஏறத்தாழ 10 ஆயிரம் ஆசிரியர்களின் உள்ளீர்ப்பு கோவைகள் மாகாணக் கல்வித்திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்று பரீசீலிக்கப்பட்டு மாகாணக்கல்வியமைச்சுக்கு அனுப்பப்பட்டு ஆசிரியர்களுக்கு கடிதங்கள் வழங்கப் பட்டுக்கொண்டிருப்பது ஒரு நல் மாற்றம் எனக் கூறலாம்.

---

# செயலூக்கமுள்ள வகுப்பறை....

செயலூக்கமுள்ள வகுப்பறையில் ஆசிரியர் ஒருவரது செயற்பாடுகளில் மிகப்பிரதானமானது ஆசிரியரும் மாணவரும் இணைந்த பங்கேற்றல் செயற்பாடு ஆகும். உண்மையில் இது நவீன கற்றல் செயற்பாடாகும். மாணவர்களை செயற்படவைப்பதாயின் ஆசிரியர் மாணவனுடன் இணைந்து செயற்படவேண்டும். ஆசிரியரின் பங்குபற்றாலானது மாணவனுக்கு உற்சாகத்தையும் இயல்பான நிலைமையினையும் ஏற்படுத்தி அவனை செயற்பட வைக்கும். உண்மையில் இன்றைய கல்வி முறையானது போதனை முறை, ஆசிரியமைய கற்பித்தல் முறை என்ற நிலைமைகளைத் தாண்டி மாணவர்மைய, பிள்ளைநேய, தேர்ச்சிமைய செயற்பாட்டு முறையிலான கற்றல் என்ற புதிய முறையினுள் பிரவேசித்துள்ளது. ஆசிரியர்களை மட்டும் நம்பியதாக இன்றைய கல்விமுறை இல்லை.

ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொருவிதமானவனாக கவனிக்கப்படவேண்டும். தனியாளை மையப்படுத்தியதாக தனது போதனை முறையினை ஒரு போதனாசிரியர் என்ற நிலையிலல்லாது வசதியளிப்பவர் என்ற நிலையில் ஆசிரியர் மேற்கொள்ளவேண்டும்.

அவ்வாறில்லாமல் சகல மாணவர்களுக்கும் பொதுவான ஒரு கற்பித்தல் என்ற பாதையில் 'ஆசிரியர் செல்லவிளைவாரானால் அங்கு நேர்முகமான விளைவுகள் ஏற்படமுடியாது. அது மட்டுமல்லாது இன்றைய மாணவர்கள் நவீன கற்றல் கலாசாரத்தில் உட்படுத்தப்படவேண்டியவர்களாக வளர்க்கப்பட வேண்டும். என்ற சிந்தனை ஆசிரியருக்கு மேலோங்குதல் வேண்டும்.

விடயங்களைக்கண்டறிவதிலும் விடயங்களைத் துருவி ஆராய்வதிலும் பிரச்சினைகளை முயன்று விடுவிப்பதிலும் புதிய புதிய எண்ணக்கருக்களை கூட்டுருவாக்கம் செய்வதிலும் மாணவர்கள் ஆர்வமிக்கவர்களாக உருவாக்கப்படல் வேண்டும். இவ்வாறு மாணவர்கள் தமது உளவயதுக்குப் பொருத்தமான வகையில் செயற்திறன் வாய்ந்தவர்களாக செயற்படுவதற்கு ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலான இயல்பான உறவுநிலை மிக முக்கியமானதாகும்.

பிள்ளையினை அறிந்தவராக ஆசிரியர் செயற்படும் போது தான் குறித்த மாணவர்கள் விசேட தேவைகளை உடைய பிள்ளையாகவோ உளக்குறை பாடுடைய பிள்ளையாகவோ கற்றலில் இடர்படும் பின்னடைவான மாணவனாகவோ அடையாளங் காணப்பட முடியும்.

அவ்வாறு இல்லாவிடின் உயிர்ப்பற்ற ஒரு வகுப்பறையாக மாணவர்கள் வந்து இருந்து செல்லும் இடமாகவே காணப்படும். மாணவர்களின் செயற்படும் ஆற்றலை மேம்படுத்தும் அதாவது மாணவர்களின் வினவுகின்ற எதையும் ஏன்? எப்படி? எவ்வாறு? என வினவி ஆரா யும் ஆற்றலை மேம்படுத்தும் வினாக்கள் கற்றல் பணியை இலகுவாக்கும் அதற்கு ஆசிரியருக்கும் மாணவருக்குமான இடைவெளிகள் தகர்க்கப்பட்டு கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் இடையே வலுவான பிணைப்பை தோற்றுவித்தல் வேண்டும். மாறாக ஆசிரியர் உயிர்ப்பற்ற இயந்திரமயமான கற்பித்தல், பணியை மட்டும் மேற்கொள்பவராகில் செயற் சோர்வுடைய செயற்பாடற்றதன்மையே மாணவர்களிடையே ஏற்படும்.

### செயலூக்கமற்ற வகுப்பறை...

மாணவர்களது நிலையில் வகுப்பறையில் மாணவர்கள் கற்றல் நிலைமைகளின்போது செயற்திறன் மிக்கவர்களாகச் செயற்படவில்லை எனின் அப்பிரச்சினைக்குரிய நிலைமையின் பரிமாணங்களை கீழ் வருமாறு நோக்கலாம்.

1. ஆசிரியரது இருப்பு மாணவரைக் கவரமுடியாமை.
2. மகிழ்ச்சிகரமான கற்றல் நிலைபெறாமை.
3. மாணவர்களது பங்குபற்றல் நிகழாமை அல்லது பின்னடைவாக காணப்படுகின்றமை.
4. மாணவர்களது புத்தாக்கல் சிந்தனைகள் துலங்காமை.
5. ஆசிரியர் மீது நம்பிக்கையை உருவாக்க முடியாமை.
6. பரந்துபட்ட விடய ஆற்றல் இல்லாமை.
7. கற்றல் பெறுபேறுகளில், எதிர்பார்த்த தேர்ச்சிகளில் பின்னடைவு காணுகின்றமை.
8. கற்றவற்றை சுயமாகவினவி மீட்கும் ஆற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவடைகின்றமை.

9. கற்றவற்றில் சுயமதிப்பீடு செய்யமுடியாமை.

10 ஆசிரியர் தொடர்பாக பய உணர்வைக் கொண்டிருக்கின்றமை.


11. குழு உணர்வு ஏற்படாமை.

12. துரிதமாக ஒரு விடயத்தில் இறுதிவரை ஈடுபட ஈடுபாடுகாட்டாமை.

இந்நிலைமையானது மாணவர்களது குழுநிலைக் கற்றல் செயற்பாட்டிலும் குழப்பங்களை ஏற்படுத்தும், குழுவாக குழு உணர்வுடன் செயற்படும் தன்மை குறைவடையும்.

முரண்பாடும் மாணவர்களுக்கிடையில் இடைத் தொடர்பு இடைவினைத் தொடர்புகள், ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமான இடைவினை என்பவை அற்றுக்காணப்படும். வகுப்பறை உயிரற்ற ஜடமாகமந்த நிலையில் காணப்படும். மாணவர்கள் தமக்கிடையே கலந்துரையாடல்களை நிகழ்த்தாது அமைதியாக இருக்குமாறு கட்டுப்படுத்தப்பட்டிருப்பர். செயற்பாடுகளில் சுதந்திரமான மாணவர்களின் சிந்தனைக்கு இடமிருக்கமாட்டாது. வகுப்பறைச் செயற்பாடு அல்லது கற்றல் செயற்பாடு என்பது வெறும் அப்பியாசக் கொப்பிகளில் மாணவர்களால் எழுதிவைக் கப்படக்கூடிய குறிப்புக்களும், பயிற்சிகளும் என்பதாகவும் அவற்றை நெட்டுருப்படுத்தி பரீட்சைகளில் மாணவர்கள் எழுதவேண்டும். அல்லது எழுதுகின்ற செயலுமாகும். இச்செயலொழுங்கு மாணவரிடத்து எவ்விதமான உயிர்த்துடிப்பான துலங்கலையும் ஏற்படுத்தமாட்டா.

## சிறுவர் உரிமைகளும் கல்வியின் இலக்குகளும்



கல்வியானது பிள்ளையின் ஆளுமை, திறமைகள், உள மற்றும் உடல் சார்ந்த ஆற்றல்கள் என்பவற்றை முழுமையாகப் பரிணமிக்கச் செய்தல் வேண்டும். கல்வியானது சுதந்திர சமூகமொன்றிலே உயிர்த்துடிப்பானதும் முதிர்ச்சியானதுமான வாழ்க்கையை வாழ்வதற்கு பிள்ளையை ஆயத்தஞ் செய்தல் வேண்டும். அத்துடன் பிள்ளையின் பெற்றோர், பிள்ளையின் கலாச்சார தனித்துவம், மொழி, விழுமியங்கள் என்பவற்றின் மீதும் மரியாதையை வளர்த்தல் வேண்டும்.

கல்வி கற்கும் உரிமை பிள்ளைக்கு உண்டு. இலவசமான கட்டாய ஆரம்பக்கல்வி, ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் கிடைக்கக்கூடிய பல்வேறு வகையான இடைநிலைக்கல்வி, ஆற்றலின் அடிப்படையில் சகலருக்கும் கிடைக்கக்கூடிய உயர் கல்வி என்பவற்றை உறுதி செய்தல் கடமையாகும். பாடசாலையின் ஒழுக்கக்கட்டுப்பாடு பிள்ளையின் உரிமைகளுக்கும் கௌரவத்திற்கும் இசைவாக இருத்தல் வேண்டும்.

விசேட தேவையுள்ள ஒருபிள்ளை முழுமையான, கௌரவமான வாழ்க்கைவாழ்வதற்கும் அதியுயர் அளவு சுயநம்பிக்கையும் முடிந்தளவு சமூக ஒன்றிணைவையும் எய்துவதற்கு உதவும் வகையில் விசேட கவனம், கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கான உரிமையைக்கொண்டுள்ளது.

இளைப்பாறுவதற்கும், ஓய்வாக இருத்தலுக்கும் விளையாடுவதற்கும், வயதுக்கேற்ப பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதற்கும் கலை, கலாச்சார நிகழ்ச்சிகளில் சுதந்திரமாகப்பங்குபற்றுவதற்கும் பிள்ளைக்குள்ள உரிமையை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

கலை, கலாச்சார நடவடிக்கைகளில் பூரணமாக பங்கு கொள்ளும் உரிமை பிள்ளைக்கு உண்டென்பதை மதித்து, கலை கலாச்சார மற்றும் பொழுது போக்கு, ஓய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தகுந்த சம வாய்ப்புக்கள் வழங்கப்படுவதை ஊக்குவித்தல் வேண்டும்.

## செயற்பட்டு மகிழ்வோம்.
## ஆரம்பக்கல்வி சிறார்களின் விளையாட்டு நிகழ்வு

ஆரம்பக்கல்விச் சிறார்களின் உடல் உள ஆரோக்கியத்துக்கும் ஆளுமை மேம்பாட்டிற்கும் ஏற்றவகையில் 'செயற்பட்டு மகிழ்வோம்" என்ற விளையாட்டு நிகழ்வு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. வடக்கு மாகாணத்தின் சகல ஆரம்பக்கல்விச்சிறார்களும் பங்கு பற்றக்கூடிய வகையில் இந்நிகழ்வு இருப்பது சிறப்பானதாகும். வாழ்க்கைக்குரிய தேர்ச்சிகளை வழங்கக்கூடிய இயல்பான செயற்பாடுகள் விளையாட்டுக்களாக போட்டி மனப்பாங்கில்லாமல் குழுவாக செயற்படக்கூடிய வகையில் முன்வைக் கப்படுவது இந்நிகழ்விற்கு பெருமை சேர்ப்பதாகின்றது.

இச் செயற்பட்டு மகிழ்வோம்" நிகழ்வுகள் பாடசாலை, கோட்ட வலயமட்டங்களில் நடாத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பாக செயற்பட்ட பாடசாலை அணிகள் மாகாணமட்டத்திலான விளையாட்டு நிகழ்வில் பங்குபற்றி தமது திறனை வெளிப்படுத்தின. 24.4.2015 இல் யாழ்ப்பாணம் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 36 அணிகள் பங்குபற்றி பிரிவுக்கு 6 வீதம் 18 அணிகள் தெரிவு செய்யப்பட்டன.

மாணவர்களது உள ஆரோக்கியமும், கற்றலில் ஆர்வமும் தேர்ச்சியும், அவர்களின் உடல் ஆரோக்கியத்திலேயே தங்கியுள்ளது. சுயாதீனமான சிந்திக்கும் திறன் பிரச்சினைகளை விடுவிக்கும் சிந்தனைத்திறன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவையும் செயலூக்கமும் இவ்விதமான விளையாட்டு செயற்பாடுகளின் மூலம் மாணவர்களுக்கு கிடைக்கின்றது என்பதை பல வல்லுனர்கள் ஆய்வுகளின் மூலம் உறுதிப்படகூறுகின்றனர்.

'கற்போம், விளையாடுவோம், செயற்பட்டு மகிழ்வோம்.



## வடமாகாண விளையாட்டுத்துறையின் பாய்ச்சல்கள் ஒரு சுருக்க அறிக்கை

உடல் ஆரோக்கியம் உடையோரே உள ஆரோக்கியம் உடையவர்கள் ஆவர். உடல் உள ஆரோக்கியத்துக்கும் அமைதியான வாழ்விற்கும் உறுதிமிக்க சமூக உருவாக்கத்திற்கும் விளையாட்டுக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சுயஒழுக்கமுள்ள விழுமியங்களை பின்பற்றுகின்ற மாணவர் சமுதாயமொன்றின் அடித்தளம் உறுதிமிக்க விளையாட்டுச் செயற்பாடுகளால் உரமூட்டப்படுதல் அவசியமானது. விதி முறைகளைப் பின்பற்றுகின்ற விட்டுக்கொடுக்கின்ற, வெற்றிதோல்விகளைச் சமமாக மதிக்கின்ற தோல்வியுற்றோரை தழுவி ஊக்கப்படுத்துகின்ற, வெற்றிபெற்றோரை மேன்மேலும் திறன் விருத்தி ஏற்படுத்துகின்ற, பல்வேறு தூண்டல்கள் இவ் விளையாட்டுத்துறைக் கூடாகவே வித்திடப்படுகின்றது எனக்கூறலாம். சம நிலை ஆளுமை கொண்ட சமுதாய உருவாக்கத்தில் ஆரோக்கியமான விளையாட்டுத்துறை இன்றியமையாத ஒன்றாகும்.

வடக்கு மாகாணத்தில் நீண்ட கடினமான சூழல்களுக்குப்பின் மாணவர்களின் உடல் உளமேம்பாட்டிற்கு உறுதுணை புரியும் வகையில் இணைபாடவிதானச் செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அவ்வகையில் பாடசாலை மாணவர்களின் உடற்பயிற்சி செயற்பாடுகளும் விளையாட்டுச் செயற்பாடுகளும் விசேட கரிசனைக்குரிய விதத்தில் முன்னெடுக்கப்பட்டு வருவது யாம் அறிந்த ஒன்றே மாகாணக் கல்வித்திணைக்கள விளையாட்டுத்துறையினரின் செயற்றிறன் மிக்க முன்னெடுப்புக்கள் மத்திய கல்வியமைச்சின் வழிகாட்டுதலிலும் வடக்கு மாகாண கல்வியமைச்சரின் ஆலோசனைக்கேற்பவும் செயற்பட்டு விளையாட்டு துறையில் பல சாததனைகளை பாய்ச்சல்களை ஏற்படுத்தி வருகின்றது.

ஆரம்பப்பிரிவுகளில் செயற்பட்டு மகிழ்வோம் என்ற இயல்பான விளையாட்டு செயற்பாடுகள் நடைபெற இடைநிலை மற்றும் மேற்பிரிவு மாணவர்களுக்கு பாடசாலை மட்ட, கோட்டமட்ட, வலயமட்ட மாகாணமட்ட, தேசியமட்டம் வரையில் சாதனை படைக்கக்கூடிய பாங்கு வலுப்படுத்தப்பட்டு உள்ளது. பாடசாலைகளில் விளையாட்டுத்துறை ஆசிரியர்களின் சிறப்பான பயிற்சியும், இத்துறைசார் கல்வியாளர்களின் இடையாறாத ஊக்குவிப்பும் இச்சாதனைகளை ஏற்படுத்தி உள்ளது எனக்கூறுவது மிகையல்ல.



அகில இலங்கைப்பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகளில் மாகாணங்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளும், நிலைகளும்

| 2010 | | | 2011 | | | 2012 | | | 2013 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இடம் | மாகாணம் | புள்ளிகள் | இடம் | மாகாணம் | புள்ளிகள் | இடம் | மாகாணம் | புள்ளிகள் | இடம் | மாகா ணம் | புள்ளிகள் | இடம் | மாகா ணம் | புள்ளிகள் |
| 01 | மேற்கு | 978 | 01 | மேற்கு | 728 | 01 | மேற்கு | 874 | 01 | மேற்கு | 1088 | 01 | மேற்கு | 1118 |
| 02 | மத்திய | 368 | 02 | மத்திய | 441 | 02 | மத்திய | 612 | 02 | சபரகமுவ | 537 | 02 | வடமேல் | 541 |
| 04 | சபரகமுவ | 289 | 03 | வடமேல் | 359 | 03 | சபரகமுவ | 577 | 03 | வடமேல் | 525 | 03 | சபரகமுவ | 519 |
| 03 | வடமேல் | 281.5 | 04 | சபரகமுவ | 357 | 04 | வடமேல் | 493 | 04 | மத்திய | 524 | 04 | மத்திய | 472 |
| 05 | தெற்கு | 134 | 05 | தெற்கு | 175 | 05 | தெற்கு | 284 | 05 | தெற்கு | 236 | 05 | வடக்கு | 189 |
| 06 | வடமத்தி | 167.5 | 06 | வடமத்தி | 100 | 06 | வடக்கு | 178 | 06 | வடக்கு | 198 | 06 | வடமத்தி | 178 |
| 07 | வடக்கு | 81 | 07 | வடக்கு | 93 | 07 | வடமத்தி | 124 | 07 | ஊவா | 116 | 07 | தெற்கு | 163 |
| 09 | ஊவா | 32 | 08 | கிழக்கு | 47 | 08 | ஊவா | 100 | 08 | வடமத்தி | 110 | 08 | ஊவா | 121 |
| 08 | கிழக்கு | 21 | 09 | ஊவா | 20 | 09 | கிழக்கு | 39 | 09 | கிழக்கு | 82 | 09 | கிழக்கு | 52 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில மொழித்தின போட்டிகள் 2015 ஒரு பார்வை

இவ்வருடத்திற்கான வடக்கு மாகாண மட்ட ஆங்கில மொழித்தினப்போட்டிகள் கடந்த 29,30 யூலை 2015 இலும் 1ஆகஸ்ட் 2015 இலும் சிறப்பாக நடைபெற்றன. இதில் தேசியமட்ட போட்டிகளுக்காக ஏறத்தாழ 50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் வாய்மொழிமூலப் போட்டிகளான பேச்சு, பாவோதல் ஆகியவற்றுக்கு வலயங்களில் இருந்து 312 மாணவர் பங்குபற்றியிருந்தனர். அதேபோல் குழுப்போட்டிகளான நாடகப்போட்டிகளில் 576 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். அதேவேளை ஆக்கம், உறுப்பெழுத்து, சொல்வதெழுதுதல், ஆகிய எழுத்துப் போட்டிகளில் 744 மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர். இந்நிகழ்வுகள் தென்மராட்சி கல்வி வலயத்திலும், மற்றும் வவுனியா, மன்னார், கிளிநொச்சி வலயங்களிலும் சிறப்பாக நடைபெற்று தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல்கள் தேசியமட்டத்திற்கு போட்டியிடுவதற்காக கல்வியமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் நவம்பர்மாதம் சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இதைத்தவிர மாகாணமட்டத்தில் மாத்திரம் நடாத்தப்பட்டு சான்றிதழ் வழங்கும் சில நிகழ்ச்சிகளான ஆங்கில குழுப்பாடல்கள், தனி நடிப்பு, உரத்து வாசித்தல், சொற்போர், திறந்த நாடகம் என்பன செப்ரெம்பர் மாதத்தில் நடாத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் பற்றாக்குறையாக உள்ள ஆசிரிய வகுதியினரில் ஆங்கில ஆசிரியர்களே முதலிடம் பெறுகின்றனர். ஆரம்பபிரிவில் ஆங்கிலம் கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவை 900 ஆக இருக்கும் நிலையில் 180 ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளனர். அதுபோல் இடைநிலை பிரிவில் 1200 ஆசிரியர்களின் தேவை உள்ள நிலையில் 1000 ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளனர். இத்தகைய பற்றாக்குறை நிலையிலும் கூட ஆங்கில பாடத்துறையினை மேம்படுத்துவதற்கான இடையறத செயற்பாடுகளை ஆசிரியர்களும், ஏனைய ஆளணியினரும் மேற்கொண்டுவருவதுடன் இத்துறையில் மாணவர்களின் அடைவுமட்டத்தை, தேர்ச்சி மட்டத்தை உயர்த்தும் வகையில் முனைப்புக்காட்டுவது பாராட்டுக்குரியது.

"முடங்கி கிடந்தால் மூலையே உன் வாழ்வு: முயற்சியுடன் கல், உலகமே உன் கையில்"

செல்வி.யோ.கானுஜா
மு/யோகபுரம் மவி.

"கண்ணிருந்தால் உலகை நீ பார்ப்பாய், நல்ல கல்வி இருந்தால் உலகம் உன்னைப் பார்க்கும்"

செல்வன்.ம.நிரத்தனன்
மன்/அடம்பன் ம.ம.வி.

## சமூக இசைவாக்கமும் அழகியற் கல்வியும்



மனித வாழ்வு என்பது அடிப்படையில் ஒரு முரண்பாடுகளின் கூட்டு அல்லது பிணைப்பு என்பதாகவே ஆழ்ந்து நோக்கப்படுகின்றது. இது மனிதனின் பௌதீக உடல் உறுப்புக்களில் மரபு அணுக்களிலிருந்து அவனது செயற்பாடு அவன் வளரும் சூழல் என எல்லாவற்றிலும் அடையாளம் காணக்கூடிய ஒன்றாகவும் உள்ளது. ஆண், பெண் , இயலுமை, இயலாமை எனத் தொடரும் இம்முரண் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதும் ஒன்றையொன்று ஆளுமைப் படுத்துவதிலும் இயங்கு நிலையைக் காட்டுகிறது. இதுதான் இதில் ஆச்சரியமான விடயம் அதாவது இம்முரண்கள் ஒன்றாகவே இயங்க வேண்டும் அவ்வாறு ஒன்றாகினால் தான் உயிர்ப்பு ஏற்படும்.

மனிதன் வாழும் சூழலை நோக்கினால் கூட மனிதனும் ஏனைய உயிரினங்களும் சூழலால் கட்டுப் படுத்தப்படுகின்றன அல்லது வசப்படுத்தப்படுகின்றன அல்லாவிடின் சூழலை வசப்படுத்த முயலுகின்றன எவ்வாறாயினும் இம் முரண்களின் இணைப்பிலேயே அவனது வாழ்க்கை அமைகின்றது.

இரு வேறு விதமான அல்லது பல்வேறு விதமான பருப்பொருட்கள் தமது தனித்துவத்தை அடையாளப் படுத்தவும், இழந்துவிடாமலும் அதே வேளை ஏனையவற்றின் தனித்துவங்களை ஏற்றுக்கொள்ளவும் இயங்குவதற்கு அனுமதிக்கும் போது தான் இசைவாக்கம் ஏற்படுகின்றது. இயக்கம் ஏற்படுகின்றது. இல்லாவிட்டால் முரண்கள் உச்சம் பெற்று இயங்குவது கடினமாகி விடுகின்றது.

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வின் உட்பொருளை உணர்ந்து வாழ்வாங்கு வாழுவதற்கு அவன் சார்ந்த தொன்மங்கள் / பாரம்பரியங்கள், மரபுகள், விருப்பங்கள் பூர்த்தியடையவும், அனுசரித்து, பின்பற்றி செல்லவும் கூடிய இடம் அவனுக்கு தேவையாகின்றது. இவ்விடம் கிடைப்பது அவனது வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவதுடன் திருப்திகரமாக உணர்வதற்கும் வழிகோலுகின்றது. அவனது தனித்துவ விடயங்களை செயற்படுத்த இயலாத சூழல் ஏற்படுமிடத்து அது முரணைத் தோற்றுவிப்பதுடன் இசைவாக்கத்தை நிறுத்துகின்றது.

மனித வாழ்வு என்பது தனி மனிதனது வாழ்வு என்பதாக அர்த்தப்படாது. கூட்டான ஒரு குழுமத்தின் வாழ்வாகக் கருதப்படுகின்ற போது பல குழுமங்களுக் கிடையேயான இசைவாக்கம் கருத்தில் எடுக்கப்படுகின்றது. இவ்வகையில் இது சமூக இசைவாக்கமாக கொள்ள முடிகின்றது. இன்னும் ஒரு வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவதானால் மனிதர்களிடையேயான உணர்வு ரீதியான புரிதல்கள் எனக் கூறலாம்.

இனக் குழுமங்களிடையே உணர்வு ரீதியான புரிதல்களை ஏற்படுத்த வேண்டுமானால் அல்லது ஏற்பட வேண்டுமானால் நேர்சிந்தனை அல்லது ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை (Respect) மதிப்பளிக்கவும் விழுமியங்களைப் பெறவுமான சிந்தனை சுதந்திரம் என்பவை மிக அடிப்படையான பண்புகளாகின்றன. எனவே தான் 'பாடசாலைகளில் சிறார்களுக்கு வழங்கப்படும் கல்வியே ஒரு நாட்டினை செதுக்குகின்றது" என்ற கருத்து பிரபல்யம் பெற்றது எனலாம்.

மாணவர்களுக்கிடையே ஒற்றுமையினையும் உணர்வு ரீதியான புரிதல்களையும் ஏற்படுத்த இனம், மதம், மொழி, பொருளாதாரம் சார்ந்த காரணிகள் இடையூறாக இருக்கக்கூடாது. இவற்றைச் சாதூரியமாக கையாளவும் புரிதல் ஏற்படவும் விளையாட்டுக்கள், அழகியற்கலைகள், ஆற்றுகைகள், பன்மொழிப்புலமைத்துவம், புத்தாக்கச் செயற்பாடுகள் என்பனவும் ஒழுக்க விழுமியங்களும் சிறப்பாக துணைபுரியும்.

சமூக இசைவாக்கத்தை ஏற்படுத்துவதில் அல்லது உணர்வு ரீதியான புரிதல்களை ஏற்படுத்துவதில் அழகியல் உணர்வும், ஆற்றுகைக்கலைகளும் மிகச் சரியான தேர்வாகக் கருதப்படும். இசை, நடனம், சித்திரம் போன்ற கலைகள் இயல்பாகவே மன உணர்வுகளுடன் ஒன்றிப்பை ஏற்படுத்தும் கலைகள் ஆகும். சங்கீதத்திலுள்ள இராகங்கள் செவிவளியில் மனதுக்குள் நுழைந்து இரசாயன மாற்றங்களை உடலுக்குள் ஏற்படுத்துபவையாகும். இறுக்கத்தை தளர்த்தவும் மகிழ்வைத் தரவும் உடலில் அதிர்வுகளை ஏற்படுத்தவும் இசை மிக முக்கியமானதாகும். 'இசையில் மயங்காத இதயமெது" என சிறப்பாக குறிப்பிடக் கூடிய வகையில் இசை உள்ளது.

இசைக்கக்கூடிய அல்லது பாடக்கூடிய திறன்களைப் பெறுவது என்பதிலும் பார்க்க இசையை மனதுள் நிறுத்தி இரசிக்க கற்றுக் கொள்ளல் என்பதே சமூக இசைவாக்கத்துக்கு உந்து சக்தியாக அமையும். மொழியைக் கடந்த இசை எமது உடலுக்குள் ரிதத்தை, தாளத்தை, கதியை ஏற்படுத்துகின்றது. தமது இசையை இசைக்கவும் போற்றவும் ஏனைய இசையை இரசிக்கவும், மதிக்கவும் கற்றுக் கொள்ளல் என்பது அனுபவ முதிர்ச்சிக் கூடாகவே ஏற்பட முடியும். எனவே பாடசாலைகள் சிறார்களுக்கு இசையைப் பழகுவதற்கான, கேட்டு இரசிப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்த வேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பில் ஏதாவது ஒரு அழகியற் கலையை கற்கவும் மனதொன்றி பயிலவும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

சித்திரம் அல்லது ஓவியக்கலை இயல்பாகவே மனிதர்களிடையே மென்னுணர்வை ஏற்படுத்த வல்லது. அழகு என்ற உணர்வு ஏற்பட இக்கலை உதவுகின்றது. இயற்கை எம்மைச் சுற்றிலுமுள்ள சூழல், காலம், பொருள், உயிரினங்கள் , மனிதர், மனித உடல் என அனைத்திலும் உள்ள உயிர்ப்பு, அழகு, கோடுகள், வர்ணஜாலம் என்பவை பற்றிய உணர் நிலையை யாவரும் உணர்தல் வேண்டும். இரசிக்க வேண்டும். இரசிப்பதற்கான அனுபவம் வழங்கப்பட வேண்டும். உயிர்ப்பின் அல்லது அசைவின் அற்புதத்தை இரசிக்கத் தெரிகின்ற போது அதற்கான பெறுமதியை, மதிப்பை மனம் வழங்க முன்வரும். அதற்குப் பின்னால் உள்ள இறைவனின் படைப்பின் மகிமையை போற்ற முற்படும். இது குறித்த விடயத்தில் இசைவாக்கத்தை ஏற்படுத்தும். உதாரணமாக மொழி கடந்த, இனம்கடந்த, நிலையில் ஒரு ஓவியம் அற்புதமான உணர்வைத் தரமுடியும். அப்பெருமிதம் மனித நேயத்தையும் மதிப்பையும் சமூக இசைவாக்கத்தையும் ஏற்படுத்தும்.

நவீன இன்றைய யுகத்தில் அழகியற் கலைகள் குறித்த ஒரு இனம், மதம், பிராந்தியம் சார்ந்ததாக இல்லாது உலகம் தழுவியதாக பரவத்தொடங்கியிருப்பதும் பயிலத் தொடங்கியிருப்பதும் நல் மாற்றத்தின் அறிகுறியாகும். மேற்கு ஐரோப்பாவிலும், அவுஸ்ரேலியாவிலும் கர்நாடக இசையும், பரத நடனமும் பல்லாயிரம் வெள்ளையின மக்களால் இரசிக்கப்படுவதும், பயிலப்படுவதும் இம்மாற்றத்தின் தொடர்ச்சியே. இதுபோல் தென்னிந்திய திராவிட சிற்பங்களும் ஆலயங்களும் உலகளாவிய சிறந்த கலைக்கருவூலங்களாக மதிக்கப்படுவதும் சமூக இசைவாக்கத்திற்கு அழகியற் கலைகள் எவ்வளவு தூரம் பங்களிப்பைச் செய்கின்றன என்பதற்குச் சான்று பகர்கின்றன.

உலக மனிதன் இனம் கடந்தவனாக, மொழி கடந்தவனாக, மதம் கடந்தவனாக மென்னுணர்வு கொண்ட கலாரசிகனாகவே இருப்பான். அப்போது தான் மனிதத்துவம் உயிர்ப்போடு இயங்கும். நாமும் ஓர் கலை பயில்வோம்.

## தேசிய கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி 2015

இவ்வருடம் நடைபெற்ற தேசியமட்ட கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வடக்கு மாகாணத்தில் இருந்து விஞ்ஞானபாடத்திற்கு 12 மாணவர்கள் தோற்றியிருந்தனர். இதில் சிறப்பாக செயற்பட்ட இரு மாணவர்கள் தேசியமட்டத்தில் வெண்கலப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

வவுனியா தமிழ்மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 7 மாணவன் வி.விதுவர்ஷன் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த தரம்7 மாணவன் ஏ.வித்தியாசாகரன் ஆகிய இருவருமே இம்மாணவர்கள் சர்வதேச மட்டத்திலான போட்டிகளை நோக்கி வடபுல மாணவர்கள் முன்னோறிச் செல்வதற்கும் விஞ்ஞானத் துறையை விருப்போடு கற்பதற்கும் எதிர்கால விஞ்ஞானிகளாக தம்மை வளர்த்துக் கொள்வதற்கும் இப்போட்டிகள் வளி சமைக்கின்றன.

கணிதத்துறையைச் சேர்ந்த ஒலிம்பியாப் போட்டிகளில் வடக்கு மாகாணத்தில் இருந்து ஏறத்தாள 900 மாணவர்கள் பங்கு பற்றி 100 மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்டனர். யாழ். இந்துக்கல் லூரியைச்சேர்ந்த தரம் 8இல் கற்கும் ந. சிவமைந்தன் என்ற மாணவன் சர்வதேச மட்டத்திலான போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டு இந்தோனேசியாவில் நிகழ்ந்த போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்றுள்ளமை பெருமைப்படக்கூடிய தொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழித்தினப் போட்டிகளும் நிறைவு விழாவும்

இன்றைய மாணவர்கள் முப்பரிமாண ஒளிக்காட்சி ஊடகங்களால் பெருமளவு கவரப்பட்டுள்ள நிலையில் மொழித்திறன் விருத்தியும் கலையார்வமும் குறைவடைந்து வருவதை கவனிக்கக்கூடியதாக உள்ளது. இந்நிலையில் இம் மாணவர்களை இணைப் பாடவிதானச் செயற்பாடுகளினூடாக வளர்த் தெடுக்கவேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது. இவ்வகையில் கேட்டல், கிரகித்தல், பேச்சு, எழுத் துத்திறன்களை வளர்ப்பதிலும், இசை, நடனம், நாடகம் போன்ற துறைகளை வளர்த்தெடுப்பதிலும் செயற்றின் மிக்கவையாக தமிழ் மொழித்திறன் போட்டிகள் அமைகின்றன.



கலைவளர நிலைவளரும் என்ற பொன்மொழிக்கு ஏற்ப கலையார்வம் மிக்க சமூதாயமொன்றின் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் வகையில் முத் தமிழையும் காக்கும் பொறுப்பு எம். இளம் சந்ததி யினரிடையே கையளிக்கப்படுதல்வேண்டும். தமிழ் மொழித்தினப்போட்டிகளும் நிறைவு விழாவும் இச் செயற்பாடுகளில் கல்வித்துறையினர் பின்நிற்கவில்லை என்பதைக்கூறுவதாக உள்ளன.

வழமைபோல் இவ்வருட தமிழ்மொழித்தின்போட்டி கள் பாடசாலைமட்டத்தில் ஆரம்பித்து, கோட்டம், வலயம் என கட்டங்களாக நடத்தப்பட்டு தேசியமட்ட, தெரிவிற்கான போட்டிகளாக மாகாண நிலைப் போட்டிகள் அமைந்தன. வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என மூன்று கட்டங்களாக நடத்தப்பட்ட மாகாணத்தமிழ்மொழித்திறன் போட்டி கள் 16.6.2015 அன்று யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நிறைவு விழாவாக நிறைவு பெற்றது. இவ்விழாவில் வட மாகாணக் கல்விப் பணிப் பாளர் திரு. செ. உதயகுமார் தலைவராகவும் கல்வி பண்பாணடலுவலகள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த.குருகுல ராஜா அவர்கள் பிரதம விருந்தினராகவும் திரு. இ.இரவீந்திரன் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட் டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சிறப்பு விருத்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவர்கள் மேள வாத்தியம் இன்னியம் இசைக்க மாலை அணிவித்து மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். இவ்விழாவில் கலை நிகழ்வு கள் மேடையேற்றப்படன. இக் கலை நிகழ்வில் பங்கு பற்றியோர் மாகாண நிலையில் முதலிடம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பதக்கங் களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவ்விழா வானது நன்றி நவிலல் நிகழ்வுடன் சிறப்புற நிறைவு பெற்றது.

## கணித விஞ்ஞான பாடங்களுக்கான புதிய பாடத்திட்ட அறிமுகம்

தரம் 7 மற்றும் 11இற்கான புதிய பாடவிதான செயலமர்வுகள் தற்போது நடைபெறத்துவங்கியுள்ளன. கணித விஞ்ஞான பாடங்களுக்கான வளவாளர் பயிற்சிகள் கடந்த யூலை மாதம் நிறைவு பெற்ற வகையில் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் செப்ரெம்பர் மாதம் அளவில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் 2016ஆம் ஆண்டில் குறித்த வகுப் புக்களில் இப் புதிய பாடத்திட்டமே கற்பிக்கபட வுள்ளது.



## சிறுவர் நேய அணுகு முறையும் சிறுவர்நேய பாடசாலைகளும்

சிறுவர் நேயப் பண்புகளை விருத்தி செய்யும் வகையிலான சிறுவர்நேய அணுகுமுறையும் அவ் வணுகுமுறைகளை செயற்படுத்தக்கூடிய சிறுவர் நேயப்பாடசாலைகள் தொடர்பான சிந்தனையும் 2000 ஆம் ஆண்டுகளில் எமது கல்வித்தொகுதிக்குள் கலந்துரையாடப்பட்டு 2002ஆம் ஆண்டில் கல்வி முறை மைக்குள் உத்தியோக பூர்வமாக பரீட்சிக்கப்படடது. வடமேல் மாகாணத்தில் ஏறத்தாள 125 பாடசாலை களில் மாதிரிச் செயற்திட்டமாக ஆரம்பிரிக்கப்பட்டு 2004ஆம் வருடம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஏறத்தாழ 300 பாடசாலைகள் உட்பட நாடளாவிய ரீதியில் 1400 பாடசாலைகளில் நடைமுறைப்படுத் தப்பட்டது.

தேசிய கல்விக்கொள்கைகளுக்கு ஏற்ப 2007ஆம் வருடம் இலங்கையின் சகல ஆரம்பக்கல்விப் பாடசாலைகளிலும் இச் சிறுவர் நேய அணுகுமுறை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் ஜனாதிபதி செயலக செயலணிக் குழுவொன்றின் நேரடி மேற்பார்வையில் சிறுவர் நேயப் பாடசாலைகள் தொடர்பான பல்துறைசார் செயற்பாட்டு திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு நடைமுறையில் இன்று செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

சிறுவர் நேயப்பாடசாலைகள் சகல சிறார்களினதும் சகல உரிமைகளையும் பாதுகாக்க ஆறு பரிமாணங் களை முன்வைத்து செயற்படுத்தப்படுகின்றது.

1. சிறுவர்களின் உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு சகல மாணவர்களும் உட்படுத்தப்படக்கூடிய உயிரோட்டமான பாடசாலைக் கல்வியை வழங்குதல்
2. ஆண், பெண் தொடர்பான பாலியல் சமத்துவத்தை செயற்படுத்தலும் பேணுதலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தரமான கற்றல் பேறுகளை பெறக்கூடிய வகையில் வினைத்திறனான கற்றல் சூழலை உருவாக்குதலும் அதற்கான வளங்களை ஏற்படுத்தி அனைவருக்கும் தரமான கல்வியை கிடைக்கச் செய்தலும்.

4. சிறார்களின் உடல், உள மற்றும் சூழல் தொடர்பான பாதுகாப்பான கற்றல் சூழலை உறுதிப்படுத்தல்.

5. பாடசாலை ஆசிரியர், அதிபர், பெற்றோர் நலன் விரும்பிகள் என்போரை உள்ளடக்கிய உயிரோட்டமுள்ள சமூக பங்களிப்பினை பாடசாலையின் செயற்பாட்டில் உறுதிப்படுத்தல்.

6. சிறுவர் நேய முறைமை, கொள்கைகள் அணுகுமுறைகள் என்பவற்றை செயற்திறன் மிக்க வகையில் செயற்படுத்தல், அதற்கான உதவிகளை பெறுதல்.

மேற்படி பரிமாணங்கள் சிறார்களினது உரிமையையும், சமத்துவத்தையும் தரமான பாதுகாப்பான கற்றல் சூழலையும், இவற்றை வழங்குவதில் அரசுக்கும் பெற்றோருக்கும், சமூகத்துக்கும் உள்ள கடப்பாடுகளையும் விரிவாக குறிப்பிடுகின்றது.

'வன்முறையற்ற பாதுகாப்பான செயற்றிறன் மிக்க கற்றல்சூழல் ஒன்றை எமது பிள்ளைகளுக்கு வழங்குவதே சமத்துவம் மிக்க மனிதநேயம் கொண்ட எதிர்கால பிரசைகள் உருவாக வழி வருக்கும் எனவே சிறுவர் நேய அனுகுமுறையினை எமதாக்குவோம்."

வடக்கு மாகாணத்தில் சிறுவர் நேய அணுகுமுறையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக 'கல்வி மறுசீரமைப்பு மாநாட்டின் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டிருப்பது. முக்கியமான ஒரு விடயமாகும். அண்மையில் வடக்கு மாகாணக் கல்வியமைச்சர் தலைமையில் நடைபெற்ற கல்வியபிரிவிருத்திக் கூட்டத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள 34 கோட்டக்கல்விப் பிரிவுகளிலும் ஒவ்வொரு சிறுவர் நேயப் பாடசாலைகளை முழுமையான வசதிவாய்ப்புக்களுடன் மூாதிரிப்பாடசாலையாக உருவாக்குவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### கணித வினாடி வினாப்போட்டி- 2015

கணித எண்ணக்கரு விருத்திக்கும் பிரச்சினை தீர்க்கும் ஆற்றலை வளர்ப்பதற்கும் கணித வினாடி வினாப்போட்டிகள் பெருமளவு துணைபுரிகின்றன. இவ்வருடம் வடக்கு மாகாணத்தில் ஏறாத்தாள 200 மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு பற்றி செயற்பட்டு இருந்தனர். தரம் 6 முதல் 10 வரையான வகுப்புக்களைச் சார்ந்த இம் மாணவர்கள் பாடசாலை, கோட்டம், வலயம், மாகரண மட்டம் என சிறப்பாக செயற்பட்டு தேசிய மட்டப்போட்டி களுக்காக 17மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

"அறிவு வெள்ளம் பல்கிப் பெருகும் இன்றைய நாட்களில் புதிய அறிவுத் தேடலுடன் வாழ்வில் உயர்வோம்"

**செல்வி.ரகுநாதன் நிசாந்தினி**
**யா/நாவாலி மவி.**

## உடல் ரீதியான தண்டனை தவிர்ப்பும் உளவளத் துணையும்



இன்று நாகரீகமாக மனித உரிமைகளை மதிக்கின்ற நாடுகள் அனைத்திலும் உடல் ரீதியிலான தண்டனைகள் சட்டப்படி தடைசெய்யப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. எமது நாட்டிலும் 1927ம் ஆண்டிலிருந்து சட்ட விரோதமாக்க ப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கைகளும் 1995, 1996, 2005 ஆகிய ஆண்டுகளில் மீளவும் வலியுறுத்தப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன. பண்டைய கல்விமுறைகளில் உடல் ரீதியிலான தண்டனைகள் ஒழுக்க நடைமுறைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டாலும் மாணவர்களுக்கு உளரீதியலான நெருக்குதல்களையும் அதன் மூலமான ஆளுமைச்சரிவினையே அது ஏற்படுத்தியது எனலாம். எனவே வன்முறையற்ற மகிழ்வூட்டும் வகுப்பறைக் கற்றல் சூழல் ஒன்றை உருவாக்குவதில் பிரம்படித் தண்டனையோ அல்லது நிந்தனையோ எவ்விதத்திலும் உதவுவதில்லை. அண்மையில் வடக்கு மாகாண கல்வி முறைமை தொடர்பான மீளாய்வு மாநாட்டில் உரையாடப்பட்ட விடயங்களில் உடல் ரீதியிலான தண்டனைகள் பற்றியும் அதன் உள ரீதியான தாக்கம் பற்றியும் முக்கிய இடத்தை பிடித்திருந்தன. அதுமாத்திரமன்றி கற்பித்தல் செயற்பாட்டின் போது பரவலாக ஆசிரியர்களால் உடல் ரீதியிலான தண்டனைகளும் நிந்தனைகளும் நிகழ்த்தப்படுவது தொடர்பில் பெற்றோர் மற்றும் அதிபர்கள் போன்றவர்களது கருத்துக்கள் வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பான மாற்று யோசனைகள் திறன்கள் ஆசிரியர்களிடம் வளர்க்கப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. மாணவர்களை கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு நவீன, காலத்திற்கு பொருத்தமான கற்றல், கற்பித்தல் முறைகள், இலத்திரனியல் மற்றும் கணனி, இணைய கற்றல் போன்ற முறைகள் பற்றியதும் அவற்றுக்கூடாக மாணவர்களை நேர் மனப்பாங்குடன் வசதிப்படுத்து வதற்குமான வகுப்பறை முகாமைத்துவ திறன்கள் எல்லா ஆசிரியர்களிடம் வளர்க்கப்பட வேண்டும். பிள்ளைகளின் இயலுமைகள் கண்டறியப்பட்டு தேவைகள் இனங்காணப்பட்டு பொருத்தமான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் எல்லா

(தொடர்ச்சி பக் 14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களதும் ஆசிரியர்களதும் ஆளுமை மேம்பாட்டிற்குக் களம் அமைக்கும் பௌர்ணமி தின கலாசார விழாக்கள்

வடக்கு மாகாணக்கல்வித்திணைக்களத்தால் கடந்த 5 வருட காலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் கலாசாரப்பெருவிழாவாக பௌர்ணமி தினங்களில் நடாத்தப்படும் பௌர்ணமி அல்லது முழுமதிநாள் கலைவிழாக்கள் அமைத்துள்ளன. இது வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பன்னிரண்டு கல்வி வலயங்களால் தமது பகுதிக்குள் இருக்கும் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களின் முழுமையான பங்குபற்றுதலோடு மாதந்தோறும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வருடமும் இதுவரை மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்கள் மிகுந்த சிறப்புடன் இந்நிகழ்வை நடத்தியுள்ளன.



இக்கலை நிகழ்வுகளில் தமிழர்களின் பாரம்பரிய கலைகளான கூத்து, நாடகம் நடனம், வில்லுப்பாட்டு, கவிதா நிகழ்வு, பேச்சு இசை, போன்ற ஆற்றுகை நிகழ்வுகள் அவ்வப்பிரதேச விசேட பண்புகளுடன் மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் ஆற்றுகை செய்யப்படுகின்றன. அத்தோடு அவ்வப்பிரதேச கலைஞர்களும் உள்வாங்கப்பட்டு சிறப்பிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு பௌர்ணமி நாட்கலைநிகழ்விலும் சராசரியாக 200 மாணவர்களும் ஆசிரியர்களும் நேரடியாக தமது ஆற்றுகைத் திறனை வெளிக்காட்ட சந்தர்ப்பம் கிடைப்பதுடன் இதே யளவான மாணவர்கள் பின்னணியில் இருந்தும் செயற்படுகின்றனர். இந்நிகழ்வுகள் மாணவர்கள் மத்தியில் கலை உணர்வுகளை இரசனைத்திறனை, வளர்ப்பதுடன் விழுமியங்கள் தொடர்பான நற்பண்புகள் வளரவும் ஏதுவாக அமைகின்றது. அது மட்டுமல்லாது உண்மையான உட்படுத்தும் கல்வி செயற்பாடும் இந்நிகழ்வுகளில் கடைப்பிக்கப்படுகின்றது. அதாவது விசேட தேவையுள்ளமாணவர் குழாத்தினருக்கும் அவர்களது இயலுமையின் அடிப்படையில் ஆற்றுகை நிகழ்வொன்றை ஆற்றுகை செய்ய சந்தர்ப்பம் கிடைக்கின் றது.

உள்ளூர் கலைஞர்களின் உதவியுடன் கோலாட்டம், மானாட்டம், மயிலாட்டம்,, பொய்கால் குதிரையாட்டம், இன்னியம் காண்பியப்பவனி போன்ற பல விசேட பாரம்பரிய ஆட்டங்கள் கொண்ட ஊர்வலமும், ஊர்திப்பவனியும் கூட இந் நிகழ்வுகளில் நிகழ்த்தப்படுவது விசேட அம்சமாகும்.

இன்றைய இலத்திரனியல் யுகத்திலே அருகிப்போயிருக்கும் கலைத்துவம் சார்ந்த பல பாரம்பரிய நிகழ்வுகளை பேணுவதற்கும் அதன் முனைப்பான பண்புகள் மேலோங்கும் வகையில் புத்தாக்கம் செய்வதற்கும் அதன்மூலம் இன்றைய தலைமுறையினை அதன்பால் ஈர்ப்பதற்கும் மொத்தத்தில் சமநிலையான ஆளுமையினை மாணவர்களிடையே வளர்ப்பதற்கும் களம் அமைத்து வருகின்றது. வவுனியா, வடக்கு வலயத்தின் பௌர்ணமி நாட்கலை விழா கடந்த 31,07, 2015 அன்று வவு னியா நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் நிகழ்ந்த போது மாணவர்களின் கலைத்துவ ஆற்றுகை காட்சிகள்.....

13ம் பக்க தொடர்ச்சி...

ஆசிரியர்களுமே வழங்கக் கூடியதுமான தகைமையினை ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வகையில் வடமாகாணத்திலுள்ள 15000 ஆசிரியர்களுக்கும் வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி ஒன்றை வழங்கப்படுவதற்கு ஏதுவாக திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.




**பிள்ளைகளுக்கு "எதைச் சிந்திக்க வேண்டும் என கற்பிப்பதை விட எப்படிச் சிந்திக்க வேண்டும்"என கற்பிக்க வேண்டும்.**

**மாக்ரெட் மீட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பட்டதாரி ஆசிரியர்களுக்கான திசைகோள் படுத்தல் பயிற்சி



இவ்வருடம் புதிதாக நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கான திசைகோள்படுத்தற் பயிற்சி மாகாணக்கல்வித்திணைக்கள கல்வி அபிவிருத்தி பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளது. தேசிய கல்வியியல் கல்லூரி (கோப்பாய்) யில் வதிவிடப் பயிற்சியாக நடைபெற்று இத்திசைகோள் படுத்த பயிற்சியில் 268 ஆசிரியர்கள் பங்குபற்றினர். கணித, விஞ்ஞான, ஆங்கில, தகவல் தொழில்நுட்ப பாடங்களை கற்பிக்கும் இவ்வாசிரியர்கள் வடக்கு மாகாணத்தின் கல்விச் செயற்பாட்டில் புதிய மாற்றங்களை செயற்படுத்தும் வகையில் இப்பயிற்சி நெறிக்கூடாக தம்மை வளர்த்துக்கொண்டு ஆசிரியர் பணியை செயற்றிறனுடன் மேற்கொள்ள வேண்டும். இரு கட்டங்களாக நடைபெறும் இப்பயிற்சியில் ஏற்கனவே முதற்கட்டம் நிறைவு பெற்றுள்ளது. இரண்டாவது கட்டம் இம்மாதம் 27ஆம் திகதி நிறைவு பெற்றுள்ளது.

## பிள்ளைநேய வாசிப்பு மற்றும் எழுத்தறிவு செயலமர்வு



இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு புலம் பெயர்ந்து மீள் திரும்புகின்ற மக்களின் சிறார்களின் மொழி விருத்தியையும் இணைந்து கற்கும் செயற்திறனையும் மேம்படுத்தும் வகையிலான பிள்ளை நேய வாசிப்பு மற்றும் எழுத்தறிவுச் செயற்பாடு வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு, வவுனியா, மற்றும் மன்னார் வலயங்களைச்சேர்ந்த 15 பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனை சிறுவர் நிதியம் Child tund தமது நிதி ஆதரவுடன் மாகாணமட்ட வளவாளர்களின் பங்களிப்புடன் செயற்படுத்தி வருகின்றது. கடந்த 1,2, ஆம் திகதிகளில் வவுனியாவில் வளவாளர்களுக்கான செயலமர்வு நடைபெற்றது.

## நவீன கல்விச்சிந்தனையில் (e Learning) இணையக்கற்றல்

ஆசிரியர் மைய பாரம்பரிய கற்றல் கற்பித்தல் முறையில் இருந்து மாணவர் மைய செயற்பாட்டு ரீதியான தோச்சிமைய கற்றல் கற்பித்தல் முறை மைக்கு எமது கல்விச் செயற்பாடும் கல்வி நோக்கங்க ளும் மாற்றமடைந்து இரு தசாப்த காலம் நிறைவுற்ற நிலையில் நவீன கல்விச் சிந்தனைகள் நாளாந்தம் கல்வியில் செல்வாக்கு செலுத்தும் ஒரு சந்தர்ப்பத்தில் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை சுயமாக வெளிக்கொணரக்கூடிய அதற்கு உதவக்கூடிய நவீன தொழில்நுட்ப இலத்திரனியல், மற்றும் இணையவழி கற்றல் செயற்பாடுகளை கையாளக்கூடிய மாணவர் களை அதன்பார் செலுத்தக்கூடிய வசதிப்படுத்துன ராக ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடு மாற்ற முற்றுள்ளதை நாம் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறான மாற்றத்தை தம்மகத்தே கொண்ட ஆசிரியர்களே எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய உன்னதமான கல்வியை மாணவர்கள் பெறுவதற்கு வழிசமைக்க முடியும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. அவ்வாறாயின் அத்தகைய நவீன கல்விச் சிந்தனையின் பால் ஈர்க்கப்பட்டு அதனை முன்கொண்டு செல்லும் வழிவகைகள் பற்றிய உரத்த சிந்தனையாளர்களாகவும், தேர்ச்சி கொண்டவர்களாகவும் கல்வி நிர்வாகிகளும், கல்வியாளர்களும் மாறிக்கொள்ளுதல் அவசியமாகும். அது மட்டுமல்லாது நவீன இணையக் கற்றல் மற்றும் இலத்திரனியல் சாதனங்களுக்கூடாக கற்றல் மற்றும் கல்வித் தொழில்நுட்பத்தை கையாளல் போன்ற தேர்ச்சிகளுக்கு உதவக்கூடிய சாதனங்களை மாணவர்கள் பயன்படுத்துவதற்கு பெற்றுக்கொடுப்ப தும், கல்வித்திட்ட மிடல்களில் முன்மொழிவுகளை மேற்கொள்ளவும் கூடிய அறிவையும், முன்னோக்கிய சிந்தனையையும் கொண்டிருக்கவேண்டும்.

கற்றல் செயற்பாட்டில் கணினிப்பாவனையும் அதனுடன் இணைந்ததான இணையப்பாவனையும் இன்றைய நவீன உலகின் சவால்களை சந்திக்கும் அதற்கு ஏற்ற தீர்வுகளை முன்னெடுக்கும் ஒரு அறிவை எமது சிறார்களுக்கு வழங்குதல் வேண்டும். இதற்கு தேவையான தகவல் தொழில்நுட்ப தேர்ச்சியை மாணவர்கள் ஆரம்பக்கல்விப்பருவத்தில் இருந்தே பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அது மட்டுமல்லாது சுய கற்றல் முறைமை ஒன்றுக்குள் இயல்பாக உட்படுத்தவும் வேண்டும்.

வடக்கு மாகாணகல்வி மறுசீரமைப்பு சிந்தனை தொடர்பான மாநாட்டிலும் அதன் பரிந்துரைகளிலும் இந்நவீன இணையக் கற்றல் செயன்முறைபற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் கலந்துரையாடப் பட்டுள்ளது. இதன் முக்கிய ஒருசெயற்பாடாக ஆரம் பக்கல்வியிலும், இடைநிலைச் கல்வியிலும்ஒவ்வொரு பாடத்துறைகளிலும் மாணவர்களுக்கு பயன்படுத்தக் கூடிய மென்பொருள் பாடங்கள் உருவாக்குதலும், இணைய வழிமென்பொருள் பயன்பாட்டை பயன்படுத் துதலும் ஆகிய விடயங்களுக்கு இடம் கொடுக்கக் கூடியதான LMDMU எனும் கற்றல் உபகரண அபிவிருத்தியும், முகாமைத்துவத்துக்குமான அலகு ஒன்று மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் செயற்பாடுகள் பூரணத்துவமடைகின்ற போது இவ் எதிர்பார்க்கைகள் நிச்சயம் நிறைவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனர்த்த முகாமைத்துவ கல்விச் செயலமர்வும் பாடசாலை மட்ட அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பை உறுதிப்படுத்தலும்

பாடசாலை மட்ட அனர்த்த முகாமைத்துவ கல்வி தொடர்பான இணைப்பாளர்களுக்கான செயலமர்வு 26.8.2015 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. கல்வியமைச்சின் பணிப்பாளர் திருமதி புஷ்பா விஜயசூரியா தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில் மாகாணக்கல்விப்பணிப்பாளர் திரு. செ.உதயகுமார் மாகாண இணைப்பாளர் திரு. செல்வன் மேலதிக மகாணக்கல்விப்பணியாளர் முத்து இராதாகிருஷ்ணன் ஜீ.ஐ.இசட் நிறுவன அலுவலர் திரு. வீ இராசையா திரு. ஜானக கொடித்துவக்கு மற்றும் வலயங்களில் இருந்து அனர்த்த முகாமைத்து வத்துக்கு பொறுப்பான இணைப்பாளர்கள் பங்கு பற்றியிருந்தனர். பாடசாலை மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பை உறுதிப்படுத்துவதும் மாகாண வலய இணைப்பாளர்களின் செயற்றிறனை அதிகரிப்பதற்கான செயற்திட்டங்களை முன்னெடுப் பதற்கான திட்டமிடல்களை மேற்கொள்வதுமே இச்செயலமர்வின் நோக்கமாகும் யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு நிலைய உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். ரவிஅவர்களும் இச் செயலமர்வில் பங்கு பற்றி இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்டிருந்தார்.

## உளவள ஆலோசனை வழிகாட்டல்திறன் விருத்தி பயிற்சி

மேற்படி உளவள வழிகாட்டல் ஆலோசணை நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான திறன்விருத்தி பயிற்சி வேல்ட் விசன் நிறுவனத்தின் ஆதரவுடன் மாகாண உளவள நிலையத்தினால் முன்னெடுக் கப்பட்டு வருகின்றது இப்பயிற்சியில் 45 ஆசிரியர்கள் தொடர் பயிற்சி நெறியைப் பின்பற்றி வருகின்றனர். எட்டு மாத கால அளவு கொண்ட இப்பயிற்சியில் குழுமுன்வைப்பு கலந்துரையாடல் , ஆய்வு விரிவுரை குழுச்செயற்பாடு போன்ற பல தொடர் செயற்பாடுகள் மூலம் ஆசிரியர்கள் இத்துறையில் செயற்றிறனுடன் செயற்பட வழி வகுக்கப்பட்டுள்ளது.



"கல்விக்காய் நீ செய்யும் முதலீடு உன் வாழ்வுக்காய் நீ செய்யும் காப்பீடு"

**செல்வி.உதயராஜா உஜேந்தினி**
**யா / செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை**

## இன நல்லுறவுக்கான முயற்சியில் சகோதர சங்கமம்

ஜி.ஐ.இசட் நிறுவனமும், மாகாணக்கல்வித் திணைக்களமும் இணைந்து துணுக்காய், மற்றும் முல்லைத்தீவு வலயங்களில் சகோதர சங்கமம் என்ற இன நல்லுறவுக்கான மாணவர் மகிழ்வு முகாம்களை இவ்வருடமும் நடாத்தவுள்ளமை மகிழ்ச்சிக்குரிய தாகும். செப்ரெம்பர் 11, 12, 13, ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திலும் , 18, 19,20 ஆகிய தினங்களில் துணுக்காய் மல்லாவி மாகாவித்தியாலயத்திலும் இச் சகோதர சங்கம் நிகழ்வு நடைபெற ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. தமிழ், சிங்கள, இஸ்லாமிய மாணவர்கள் ஒன்றாக கூடி செயற்படும் ஒரு சங்கம நிகழ்வாக ஒழுங்கு படுததப்பட்டிருக்கும். இம் முகாமில் அவ்வவ் இன பாரம்பரிய கலை நிகழ்வுகள், உணவுவகைகள் , என்பவற்றுடன் கலந்துரையாடல், விளையாட்டுக்கள் மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் இன மத மொழிபேதம் இன்றி உணர்வுகளை பகிரக்கூடிய ஒரு சூழல் இச்சங்கம நிகழ்வுக்கூடாக ஏற்படுத்திக்கொடுக் கப்படும் என எதிர்பார்க்கலாம்.

## TSEP முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமும், அபிவிருத்தி குறிகாட்டிகள் தொடர்பான கலந்துரையாடலும்

கடந்த 28.08.2015 கல்வியமைச்சினால் உலக வங்கியின் நிதி ஆதரவுடனான TSEP செயற்றிட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமும் அபிவிருத்தி குறிகாட்டிகள் தொடர்பான கலந்துரையாடலும் நடைபெற்றது. இக்குழுவினர் வவுனியா வலயத்திற்கு விஜயம் செய்து அங்கு நடைபெற்ற கல்விச் செயற்பாடுகள் பற்றிய விபரங்களை மகிழ்ச்சியுடன் பரிமாறிக்கொண்டனர். எதிர்வரும் O/L பரீட்சைக்கான மாணவர்களை ஆயத்தப்படுத்தும் செயற்பாடுகள், செயலமர்வுகள் நடைபெறுவதை தாம் அவதானித்ததாகவும் இயலக்கூடிய அடைவு எல்லைகளை வைத்து பாடசாலைகள் இச் செயற்பாட்டில் ஈடுபடுவதால் அவ்அடைவை அவர்கள் நிச்சயம் அடையமுடியும் என்ற நம்பிக்கை தமக்கு ஏற்பட்டதாக குறிப்பிட்டனர். இதைத்தவிர பாடசாலைமட்ட ஆசிரிய அபிவிருத்தி (SBTD) செயற்பாடுகளும், (PSI) பாடசாலை மேம்பாட்டு செயற்பாடுகளும் செயற்றிறன் மிக்க வகையில் கருத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கைப்பெறுத்தவரை கணித, விஞ்ஞான பாடங்களின் அடைவு மட்டம் மிக குறைவாக இருப்பதற்கான காரணங்கள் இருந்த போதும் அதனை மேம்படுத்துவதற்கான பல செயற்திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும். எனவும் கேட்டுக்கொண்டனர். அடுத்த வருடம் ஏறத்தாழ 363.மில்லியன் நிதி கல்விச் செயற்பாடுகளுக்காக வடமாகாணத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட்டனர்.

"எதிர்கால வாழ்வை ஒளிமயமாக்க சுயகற்றல் எனும் அத்திவாரம் இடு"

**செல்வி.தெ.கேசுகி யா / மட்டுவில் கமலாசனி வித்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்க விழுமியப் பண்புகளைப் பாடசாலைக் கல்வியினூடாக மேம்படுத்தல்

வடக்கு மாகாணத்திலே தற்போதைய பாடசாலை மாணவர்கள் மத்தியில் குழு மோதல்கள், பாலியல் சிக்கல்கள், நெறிபிறழ்வான பல்வேறு நடத்தைப் பிரச்சினைகள் போன்றன மேலெழுந்து பாரிய சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளதை அறிய முடிகின்றது. ஒழுக்க விழுமியக் கருத்துக்களைப் போதிக்கின்ற சமூகக் கட்டமைப்புச் சீர்குலைந்து ஒழுக்க விழுமியப் பண்புகள் அருகி வருவதையே இவை காட்டுகின்றன. எனவே, மீண்டும் பொருத்தமான சமூகக் கட்டமைப்பையும், மனிதப் பண்புகளையும் விருத்தி செய்து ஏனையவர்களின் கலாசார பின்னணிகளை அறிந்து மதித்து ஒன்றுபட்டு வாழும் வகையில் செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியமாகும்.

அவ்வகையில், பாடசாலைகள் மாணவரிடத்தே, மனிதரை மனிதர் மதிக்கக் கூடிய நல்ல ஒழுக்க விழுமியப் பண்புகளை விருத்தி செய்து, பூரணத்துவம் மிக்க சமுதாயத்தை உருவாக்குவதற்கான சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பாடங்கள், செயற்றிட்டங்கள், மன்றச் செயற்பாடுகள் ஊடாக இவ்வாறான ஒழுக்க விழுமியப் பண்புகளைச் சகல ஆசிரியர்களும் வழங்க வேண்டியது அவசியமாகும். எனவே, பாடசாலைகளில் கீழே தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவான செயற்பாடுகளை உரிய முறைப்படி உடனடியாக நடைமுறைப் படுத்துவதற்கு ஆவன செய்யும்படி கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச் சின் செயலாளர்,திரு இ.ரவீந்திரன் சுற்றுநிருபத்தின் மூலம் அறிவித்துள்ளார்.

விபரங்கள் வருமாறு.

1. பின்வருவனவற்றில் ஒரு விழுமியக்கருத்தை மாதத்திற்கு ஒன்றாக தெரிவுசெய்து .அதனை மையமாகக் கொண்டு அம்மாதம் முழுவதும் ஒவ்வொரு செயற்பாட்டின் மூலமும் மாணவரிடத்தே சிந்தனைக்கிளறலை ஏற்படுத்திக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் மிகவும் அத்தியாவசியம் ஆகும். காலைப் பிரார்தனை வகுப்பறைக் கற்பித்தலின் தொடக்கத்தில் இம்மன்றச் செயற்பாடுகளில் என மாணவர் சார்ந்த பாட மற்றும் இணை பாட செயற்பாடுகள் அனைத்திலும் இத்தொனிப்பொருள் மேலோங்கியிருக்கத்தக்கதாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(பிரசங்கம், நாடகம், தெருவெளி நாடகம், அரங்கச்செயற்பாடுகள், பேச்சு, கவிதை, பாடல், சித்திரம், காட்சிப்பலகையில் காட்சிப்படுத்தல், நடனம், சிறுகதை, விவரணம், பத்திரிகைத் துணுக்குகள், கதைப்படங்கள், குறுந்திரைப்படம் போன்ற ஆற்றுகை முறைகளின் மூலம் இதனை முன்வைத்துச் செயற்படல்)

- உண்மை பேசுதல் - உண்மையில் அழகைக் காணுதல்.
- நான் பெறுமதியானவன்ள்
- மரியாதை செய்வோம் மதித்து நடப்போம்.
- வணக்கம் செலுத்துவோம்
- பிரச்சினை தீர்ப்போம்
- அன்பு செய்வோம்- உயிர்களிடத்தே அன்பு செய்வோம்.
- விட்டுக் கொடுப்போம்
- மற்றவர் சொல்வதைப் கவனமாகக் கேட்போம்.
- மன்னிப்புக் கேட்போம் மீண்டும் செய்யாதிருப்போம்
- இதயபூர்வமாக நன்றி கூறுவோம் - நன்றியுள்ளவராக இருப்போம்.
- பிறர் நலன் கருதிப் பிரார்த்தனை செய்வோம்.
- பொறுப்பளிக்கப்பட்ட பணியைச்செய்து முடிப்போம்
- வேலைகளின் தீவரம் கருதி முன்னுரிமைப் படுத்துவோம்.
- ஒரு நேரத்தில் ஒரு வேலையைச் செய்வோம்
- பழிவாங்காதிருப்போம்.
- நேரத்தை மதிப்போம்
- அணியாகச் செயற்படுவோம்
- பொறுப்புணர்வுடன் நடப்போம்.
- சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருப்போம்.
- சூழலை நேசிப்போம்.

(பறவைகள், தாவரங்கள், மிருகங்கள் &)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஒவ்வொரு ஆசிரியரும் ஒழுக்க விழுமியம் தொடர்பாக மாணவர்கள் தம்மைத்தாமே சுயமதிப்பீடு செய்யும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி மாணவரது நடத்தையில் நன் மாற்றத்தை ஏற்படுத்துதல் வேண்டும் இது அவர்களது கடமையாகும்.

• வீட்டிலும், சமூகத்திலும் பாடசாலையிலும் ஒழுக்க விழுமிய செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்தும் செயற்றிட்டங்களை முன்னெடுத்தல்.

• சுயமதிப்பீடு செய்வதற்கான புள்ளித்திட்டம் ஒன்றை வகுத்து மாணவருக்கு அறிமுகப்ப டுத்தல்.

• அதனை நடைமுறைப்படுத்திச் சுய கணிப் பை ஏற்படுத்துவதன் ஊடாக நற்பண்புகளை மேலோங்கச் செய்தல்.

3. பாடசாலையில் மாணவரது திறமைகளை மேம்படுத்துவதற்கு அமைக்கப்பட்டுள்ள சமூகவிஞ்ஞான மன்றம், மாணவர் மன்றம், உளநல மன்றம், இந்துமாமன்றம், சுகாதாரக்கழகம், விளையாட்டுக் கழகம் போன்றவற்றினூடாக பின்வருவனவற்றை முன்னிலைப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டியது பாடசாலைச் சமூகத்தின் கட்டாய பணியாகும். இதற்கு, அவ்வப்பொறுப்பா சிரியர்களுடன், விஞ்ஞான, சமய, வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியமாகும்.

• தனிநபர் சுகாதாரம், பெண்கள் மாதாந்த சுகாதார முகாமைத்துவம், இனப்பெருக்கத் தொகுதி பற்றிய விளக்கங்களை மாணவர களைப் பால் ரீதியாகத் தனித் தனியே குழுக்களாக்கி விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்குதல். - தேவை ஏற்படுமிடத்து வெளியில் இருந்து (வைத்திய நிபுணர்கள், மருத்துவ உளசமூகப் பணியாளர்கள், உளவளத் துணையாளர்கள், உயிரியல் ஆசிரியர்கள், ஆலோசகர்கள்) பொருத்த மான வளவாளர்களை வரவழைத்து வக்கிர மற்ற முறையில் வழங்க முடியும்.

• ஆண், பெண் மாணவர்களை ஒன்றிணை த்துப் பால்நிலை சமத்துவம், ஒருவரை ஒருவர் மதிப்பளித்தல், பாதுகாத்தல், விட்டுக்கொடுத்தல், பாராட்டுதல், பொறுப் பேற்றல், பங்கெடுத்தல், குழுவாகச் செயற் படல் போன்ற விழுமியப் பண்புகளையும் திறன்களையும், மனப்பாங்கையும் கட்டியெழு ப்புவதற்குரிய செயற்றிட்டங்களை உருவாக் கிச் செயற்பட வைத்தல் வேண்டும்.

• தத்தமது பிரச்சினைகளைத் தாமே தீர்ப்பதற்கான பல்வேறு பொருத்தமான வழிகளைக் கண்டறிந்து பிரயோகிக்கும் விதத்தில் அமைக்கப்பட்ட சகபாடிக் குழுக் கலந்துரையாடல்களை (ஒரு குழுவில் 6 தொடக்கம் 8 பேர் கொண்ட மாணவர்) அறிமுகப்படுத்தி மாணவரை ஈடுபடுத்தல். இதன்போது பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வசதிப்படுத்துநர்களாக இணைந்து கொள்ளுவது கட்டாயமாகும்.

மேற்கூறிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் ஆசிரியர்கள் பொறுப்பளிக்கப்பட் டு செயற்பாடுகள் அடுத்துவரும் பாடசாலை காலங்களில் நடைமுறைப்படு த்தப்படல் வேண்டும். பாடசாலை நிருவாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட இச்செயற்றிட்டங்கள் தொடர்பான மேம்பாட்டு அறிக்கையினை வலயக் கல்வித் திணைக்களத்துக்கும் துறை சார் பிரதி / உதவிக்கல்விப் பணிப்பாளர் களுக்கும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். என்பதாக உள்ளது.



வடக்கு மாகாணக்கல்வித்திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர்களின் கல்விசார்மேம்பாடு தொடர்பான பயிற்ச்சியும் களப்பயணமும் அண்மையில் இடம்பெற்றது. மாகாணக்கல்விப் பணிப்பாளர் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பா ளர்கள் இக்களப் பயிற்ச்சியில் பங்குபற்றினர். மத்திய மாகாணக் கல்வித்திணைக்களத்திற்கும் பாடசாலை களுக்கும் சென்றபோது எடுக்கப்பட்ட ஒளிப்படம்.



GIZ நிறுவனத்தின் நிபுணத்துவ ஆதரவுடன் மாகாணக்கல்வித்திணைக்களத்தினால் முன்னெ டுக்கப்பட்டுவரும் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை தொடர்பான செயலமர்வின் ஒளிப்படம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தம் பாரம்பரிய கூத்து நிகழ்வொன்றில் ஆசிரியர்கள்...



பௌர்ணமி தின கலைவிழாவில் காத்தவராயன் கூத்து...



மாணவர்களின் இன்னியம்...



உள வளத்துணை விழிப்புணர்வு ஆற்றுகையின் போது...



விழுமிய மேம்பாடு தொடர்பான நாடக ஆற்றுகை நிகழ்த்தும் மாணவர்கள்...




ஆரம்ப கல்வி மாணவர்களின் சிறுவர் நாடக நிகழ்வு...



வளவாளர் பயிற்சியின் போது...



வாசிப்பு மேம்பாட்டு செயலமர்வு ஒன்றில் ஆசிரியர்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌர்ணமி தின கலைவிழாவில் நடன அளிக்கை செய்யும் மாணவிகளும் ஆசிரியர்களும் வவுனியா வடக்கு வலயத்தில்



தென்மராட்சி மாணவர்கள் பங்குபெற்றும் இன்னிய பவனி...



கலைவிழாவில் வரவேற்கப்படும் அதிதிகள் - துணுக்காய்



ஆரம்ப கல்விச் சிறார்களின் மகிழ்வூட்டும் வகுப்பறைச் செயற்பாடு...




வடக்கு மாகாண கல்வித்திணைக்களம் தயாரித்த மேலதிக கற்றலுக்கான நூல்கள்...



கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்கு தயாராகும் மாணவர்களுடன் மாகாண கல்விப்பணிப்பாளர்...




ஆசிரியர்களுக்கான திசைகோள்படுத்தல் பயிற்சியின் ஓவியக்கண்காட்சியில் கல்வி அமைச்சர்...





**மாகாணக்கல்வித் திணைக்களம் – வடக்கு மாகாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org